CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta.

உ

சிவமயம்

அருள்மிகு அழகிய கூத்தர் திருக்கோயில்
செப்பறை, இராஜவல்லிபுரம்



தல வரலாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருக்கோவிலின் முகப்பு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S.

உ

செப்பறை அருள்மிகு அழகிய கூத்தர் திருக்கோயில்

திருத்தலவரலாறு

ஆசிரியர்

பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன்

வெளியீடு :

செப்பறை அருள்மிகு அழகியகூத்தர்
திருக்கோயில் - செப்பறை.

பதிப்புரிமை : திருக்கோயில் நிர்வாகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் விபரப்பட்டியல்

நூலின் பெயர் :		அருள்மிகு அழகிய கூத்தர் திருக்கோயில் தலவரலாறு
மொழி	:	தமிழ்
நூல் உரிமை	:	அருள்மிகு அழகிய கூத்தர் திருக்கோயில் நிர்வாகம்
முதற்பதிப்பு	:	2007, ஜனவரி 24
விலை	:	ரூ. 20.00

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உள்ளே ...

எண்		பக்கம்
1.	தென்பாண்டி நாடே சிவலோகம்	23
2.	செப்பறையின் தொன்மை	25
3.	செப்பறை மான்மியம்	31
4.	பத்துப் பகுதிகளின் விளக்கம்	35
5.	ஆலயம் அமைத்தல்	40
6.	பொங்கி எழுந்த பொருநை	41
7.	ஆறை அழகப்ப முதலியார்	43
8.	திருக்கோயில் அமைப்பு	45
9.	தொன்மைச் சுவடுகள்	52
10.	அழகப்ப முதலியாரின் திருப்பணியும், பக்தியும்	54
11.	திருவிழாக்களும், நித்திய பூஜைகளும்	56
12.	கண்கொள்ளாக் காட்சி	58
13.	கல்வெட்டுச் செய்திகள்	60
14.	வழிபட்டோர் பெற்ற பயன்	62
15.	இலக்கியச் சிறப்பு	65
16.	திருப்பணி	69
17.	குடமுழுக்கு நிகழ்ச்சிகள்	71
18.	செப்பறை சுவாமிகள் வரலாறு	78

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முன்னுரை

பொன்திணிந்து புனல்பெருகும் பொருநைக்கரையில் புண்ணியங்களை வாரிவழங்கும் புண்ணியத் திருத்தலங்கள் எண்ணற்றவை. பொதிகை மலையும் அம்மலையைச் சார்ந்த பாபநாசப்பதியும் பொருநையாற்றின் கரையிலுள்ள முதல் திருத்தலம்.

திங்கள் முடிசூடும் மலை தென்றல் வந்து விளையாடும் மலை, தமிழ் முனிவன் வாழும் மலை என்று தமிழ்ச் சான்றோர்களால் போற்றப்படும் பொதிகைமலை கூட ஒரு திருத்தலமே. அகத்தியரும் அப்பெருமானால் வணங்கப்பெறும் ஆறுமுகமும், வீறுபுகழ்வேலும் கொண்ட, சண்முகர் பொதிகைமலையில் திருக்கோயில் கொண்டுள்ளார்.

பாபநாசம் தொடங்கி, பொருநையாறு கடலோடு கலக்கும் கொற்கைத்துறை வரை பொருநையாற்றில் இரு கரைகளிலும் எண்ணற்ற திருத்தலங்கள் உள்ளன. நவ திருப்பதிகளும், நவ கைலாசங்களும், பொருநைக் கரையில் பொலிகின்றன.

பொருநைக்கரைத்திருத்தலங்களுள் புகழ்மலிந்த செப்பறைத் திருத்தலமும் ஒன்று. நெல்லை நகரிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில், இராசவல்லிபுரம் என்ற ஊரையடுத்து ஒளிரும் திருத்தலம் செப்பறை.

நினைவிற்கெட்டாத நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே நிலவிடும் இத்தலத்தில் அழகிய கூத்தரும், நெல்லையப்பரும் காந்திமதி அன்னையும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திருக்கோயிலின் வரலாற்றை எழுதித்தரவேண்டுமென, திருக்கோயில் நிர்வாக அதிகாரி திரு. சு. **கசங்காத்த பெருமாள்** அவர்கள் கூறினார்கள்.

திரு. சு.கசங்காத்த பெருமாள் அவர்கள் எந்தத் திருக்கோயிலுக்கு நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்றாலும் அந்தத் திருக்கோயிலின் வரலாற்றினைச் செவ்விய முறையில் அமைத்து விடுவார்கள்.

தென்திருப்பேரை மகரநெடுங்குழைக்காதர் திருக்கோயில், தேரிக்குடியிருப்புக் கற்குவேல் ஐயனார் திருக்கோயில் வரலாறுகளை வரலாற்று அடிப்படையில் ஆராய்ந்து எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

பணியேற்றிருக்கும் திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு களையும் நிகழ்த்தி வைப்பார்கள்.

இறைவன் என்னை நன்றாகப் படைத்தான் திருக்கோயிலுக்குப் பணி செய்வதற்கே என்ற கொள்கையில் வாழும் நல்ல இளைஞர் திரு. சு. கசங்காத்த பெருமாள் அவர்கள்.

இவர் திருநெறிய பண்பும், தேர்ந்த உழைப்பும், கடமையினைச் செய்வதில் முனைப்பும் கொண்ட நிர்வாக அதிகாரி. காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் பேசாத பண்பும் இவரது அணிகலன்கள். நிர்வாக திறமையும், நடுநிலை தவறாத நேர்மையும் கொண்ட திருமகன். எடுத்த செயலை இனிதே நிறைவேற்றிடும் எழில் மிக்க இளைஞர்.

இத்தகைய பண்புநலன்களைக் கோள்கலமாகக் கொண்ட திரு. சு. கசங்காத்த பெருமாள் செப்பறை வரலாற்றை எழுதுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு என் அன்பான நன்றி. வாழ்த்துக்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த வரலாற்றை எழுதுவதற்குத் திருக்கோயிலை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டுமே, எப்படிப் போவது, செல்வது, என்று எண்ணிக் கொண்டிருக்கையில், வல்லநாட்டின் செல்வக் குழந்தையான திரு. **பொன் திருவடி** அவர்கள் எனக்குத் தோள் கொடுத்து அழைத்து சென்றார்கள். திரு. பொன் திருவடி அவர்கள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். வீரபாண்டியக் கட்டபொம்மனின் வலது கரமாக விளங்கிய வெள்ளையத் தேவனின் வழிவந்தவர்கள்.

நுட்பமான அறிவும், திட்பமான நெஞ்சுறுதியும் கொண்டவர்கள். அற்றாருக்கும் அலந்தாருக்கும் ஒடிச் சென்று உதவிடும் உத்தம சீலர். அவர்கள் செப்பறை கோயிலை அங்குல அங்குலமாக ஆய்ந்து, பழைய திருக்கோயிலையும் ஆற்றங்கரையில் கண்டறிந்து கூறியதும் எனக்குப் பேருதவியாக இருந்தது. அவர்களுக்கு என் வணக்கமும் வாழ்த்துக்களும்.

இக்கால இளைஞர்கள் புதிய முயற்சியில் ஈடுபட்டிடப் பெரிதும் விழைகின்றார்கள். கோயிலில் நாங்கள் சிலவற்றை ஆய்ந்தபோது ஒரு பள்ளி மாணவன் எங்களுக்கு துணை செய்தான். அவன் பெயர் S. நயினார். அந்த மாணவனுக்கு வாழ்த்துக்கள்.

திருக்கோயில் சிவாச்சாரியார் திரு.கணேச சிவாச்சாரியார் அவர்கட்கும் மற்றும் எங்களுக்கு உதவிய கா. கைலாச பட்டர், திரு. G. விஸ்வநாத பட்டர் திரு. சு. முத்துக்குமார பட்டர் அவர்கட்கும், திரு. சி. சுப்பிரமணியன் B.E., தலைமை பொறியாளர் ஓய்வு அவர்களுக்கும் சைவத்தொண்டர் C. முருகன் பிள்ளை அவர்களுக்கும் நன்றி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழும் உயர்திரு. சிவபூசை. சொ. சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு என்றென்றும் என் பணிவார்ந்த வணக்கங்கள்.

திருக்கோயிலின் திருப்பணிக்குழுத் தலைவர், சித்தத்தில் எப்போதும் சிவனயே கொண்டிருக்கும், சிவனடியாரான திரு. **சிவபூசை. க. திருஞான சம்பந்தம்** அவர்கட்கும், மற்றைய உறுப்பினர்களுக்கும் என் அன்பான நன்றி.

நெல்லை சீமையினை ஆண்டு வந்த தளவாய் குடும்பத்தைச் சேர்ந்த, பொருநை இலக்கிய வட்டப் புரவலர். **திரு.தீ.இராமசாமி** அவர்களுக்கு நன்றி. இந்து சமய அறநிலையத் துறையின் நெல்லை இணை ஆணையர் திரு. பா.பாஸ்கரன் அவர்களுக்கும், உதவி ஆணையர் திரு. **சீ.முத்து தியாகராசன்** அவர்கட்கும் வணக்கங்கள். நன்றி.

அன்புடன்

ச. கணபதிராமன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதிப்புரை

தென்பாண்டி நாட்டினைச் சிவலோகம் என்று போற்றுவர் சிவனடியார் பெருமக்கள்.

சிவலோகமென போற்றப்படும் இத்தென்பாண்டி நாட்டின், நடுநாயகமாக விளங்கும் நெல்லைநகருக்கு அருகில் செப்பறை என்ற சிவத்தலம் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெரும் நிலையிலும் புகழ்பெற்ற புண்ணிய தலம்.

இத்தலத்தில் திருக்கோயில் கொண்டு, அடியார்களை வாழ்விக்க எழுந்தருளிய பெருமான் அழகிய கூத்தர், நெல்லையப்பர், காந்திமதி ஆகியோர். இவர்கள் எழுந்தருளி உள்ள இத்திருத்தலத்திற்கு, கும்பாபிஷேகம் 09.06.1978ல் நடந்தது.

செப்பறை அழகிய கூத்தர் திருக்கோயிலுக்குப் பற்பல திருப்பணிகள் இப்போது ரூ. 12,10,000/- மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் சங்கம் சார்பாக ரூ. 10,00,000/- மதிப்பீட்டில் புதிய மரத்தேர் இரும்பு சக்கரங்களுடன் செய்யப்பட்டு அழகிய கூத்தர் கோவிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திருப்பணிக்குத் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 12,10,000/- வழங்கப்பட்டுள்ளது.

இத்திருப்பணிக் குழுவிற்குத் தலைவராக விளங்கும் திரு. க. திருஞானசம்பந்தம் அவர்களையும், திருப்பணிக்குழு உறுப்பினர்களையும் பாராட்டிப் போற்றுவது நம் கடமையாகும்.

திருப்பணிக்கு அனுமதியும் ஆக்கப்பூர்வமான அறிவுரையும் தந்து என்னை ஊக்கப்படுத்தி, உறுதுணை செய்து வருபவர்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மதிப்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய இணை ஆணையர் திரு. பா. பாஸ்கரன் B.Sc., B.L., அவர்கள். அன்னார் கலைபயில் தெளிவும், கடவுள் நெறி போற்றும் பண்பும் கொண்ட அறிஞர். தமிழ் இலக்கியங்களையும், திருமுறைகளையும், கற்றுத்துறை போகிய வித்தகர். அந்தப் பெருமகனுக்கு என் பணிவான வணக்கமும், நன்றியும்.

திருப்பணிகளுக்கு செயல்வடிவம் தந்துதவிய இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் மதிப்பிற்குரிய திரு. C. முத்து தியாகராஜன் M.A., B.L., அவர்களுக்கு என் பணிவான நன்றி. சொல்லைச் சுருக்கிச் செயலைச் செய்யும் சீர்மையரான உதவி ஆணையர் அவர்கள் என்னை ஊக்கப்படுத்தி உறுதுணை செய்தார்கள்.

என்னுடைய பணிக்குத் தோன்றாத் துணையாக விளங்கும் சிவபூசை சொ. சுந்தரம் பிள்ளை அவர்களுக்கும், திரு. சி. சுப்பிரமணியன் முதன்மை பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கும் இந்த வரலாற்றை எழுதிய பேராசிரியர் முனைவர். ச. கணபதிராமன் அவர்களுக்கும் நன்றி.

இந்த நூலை அழகிய முறையில் அச்சிட்ட அமிர்தலெட்சுமி அச்சகத்தார்க்கும் நன்றி. அனைவரும் இத்தலவரலாறு படித்து அழகிய கூத்தரின் அருள் பெற வேண்டுகிறேன்.

சு. கசன்காத்த பெருமாள் M.A.,
செயல் அலுவலர் / தக்கார்
அருள்மிகு அழகிய கூத்தர் திருக்கோயில்
செப்பறை, இராஜவல்லிபுரம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாழ்த்துரை

குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே.

அப்பர், தேவாரம்.

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

தமிழ் மக்களின் தொன்மையான பண்பாட்டைக் காட்டுவது அவர்கள் வணங்கிவரும் தெய்வங்களும் திருக்கோயில் களுமாகும்.

தெய்வத் திருமேனிகள் அனைத்திற்கும் தத்துவச் சிறப்புகள் உண்டு. செப்பறையில் ஆடும் ஆனந்தக் கூத்தரின் திருமேனிக்கும், திருமேனியில் பொலியும், திருக்கைகள் திருப்பாதம், விரிந்த சடை, ஆகியவற்றைத் தத்துவச் சிந்தனையோடு நமது முன்னோர்கள் உருவாக்கியுள்ளனர்.

இவ்வாறு உருவாக்கப்பெற்ற திருமேனிகளுள் ஒன்று செப்பறை அழகிய கூத்தர் திருமேனி.

அழகிய கூத்தர் எழுந்தருளியுள்ள செப்பறைத் திருக்கோயில், சில பகுதிகள் கால வெள்ளத்தில் பழுதுபட்டு விட்டன. தேரும் சிதைந்து விட்டது. சிதைந்த தேரையும் பழுது பட்ட பகுதிகளையும், சீர் செய்திட திருப்பணிக்குழு அமைக்கப்பெற்றது. திருப்பணிக் குழுவினரும் நிர்வாக அதிகாரி கசங்காத்த பெருமாளும் தளராத முயற்சியோடு பணியாற்றி, நல்ல முறையில் திருப்பணிகள் செய்துள்ளனர். திருக்கோயில் தலவரலாறு வெளியிடுகின்றனர். அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

சி. முத்துதியாகராஜன் M.A.,B.L.,
உதவி ஆணையர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
திருநெல்வேலி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கோயில் நிர்வாக அமைப்பு

மாண்புமிகு தமிழக முதல்வர்

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

மாண்புமிகு அமைச்சர். **கே.ஆர். பெரியகருப்பன்** அவர்கள்

திருமிகு. **இராஜேந்திரன்** இ.ஆ.ப. அவர்கள்

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி தமிழ் பண்பாடு மற்றும்

அறநிலையத்துறை

திருமிகு. த.பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள்

ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

திரு. பா. பாஸ்கரன் B.Sc., B.L., அவர்கள்

இணை ஆணையர், திருநெல்வேலி.

திரு. க. குருசுவாமி எம்.ஏ., அவர்கள்

உதவி ஆணையர் / துணை ஆணையர், நகை சரிபார்ப்பு அதிகாரி

திரு. சி. முத்துதியாகராஜன் M.A., B.L., அவர்கள்

உதவி ஆணையர், திருநெல்வேலி.

திரு. வீ. சொரிமுத்து அவர்கள்

ஆய்வாளர், பாளையங்கோட்டை (மேற்கு)

சு. கசன்காத்த பெருமாள் M.A.,
நிர்வாக அதிகாரி / தக்கார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கோயில் திருப்பணி குழு

1.	சிவபூசை. திரு. க. திருஞானசம்பந்தம்	தலைவர்
2.	திரு. ஆர். எம். கணேச சிவாச்சாரியார்	உறுப்பினர்
3.	சிவபூசை. திரு. சொ. சுந்தரம் பிள்ளை	"
4.	திரு. சி. சுப்பிரமணியன் (முதன்மை பொறியாளர் ஓய்வு)	"
5.	திரு. ஆ. முருகன் என்ற ஆறுமுகம்	"
6.	திரு. வ. முருகேசன்	"
7.	திரு. ஆர். அழகிய கூத்தன்	"
8.	திரு. அ. காளி	"
9.	திரு. ச. சங்கர குத்தாலம்	"
10.	திரு. எஸ். வெற்றிவேல்	"
11.	திரு. ஜி. சேதுராமலிங்கம் பிள்ளை	"
12.	திரு. ஆர்.எஸ். முருகன் பிள்ளை	"
13.	திருமதி. எஸ். சரஸ்வதி அம்மாள்	"
14.	திருமதி. செ. சக்கரவர்த்தி அம்மாள்	"
15.	திரு. எஸ். கோபால்தேவர்	"
16.	திரு. ச. சண்முகவேல்கோனார்	"
17.	திரு. அ. திருஞான சம்பந்தன்	"
18.	திரு. மர். வேலுசாமி	"
19.	திரு. சி. முருகன்	"
20.	திரு. கே. வெங்கடேஷ்	"
21.	திரு. டி. சுப்பிரமணியன்	"

சு. கசன்காத்த பெருமாள் M.A.,
செயல் அலுவலர்
மேடை தளவாய் கட்டளை, திருநெல்வேலி.
செயலாளர் / பொருளாளர், திருப்பணி குழு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவ சிவ
அழகிய திருச்சிற்றம்பலமுடையார் துணை

திருக்கயிலாய பரம்பரை, செங்கோல் ஆதீனம்
102-வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீ ல ஸ்ரீ கல்யாண சுந்தர சத்திய ஞான பண்டாரசந்நிதி சுவாமிகள்

ஆதீன கர்த்தர் செங்கோல் ஆதினம்
பெருங்குளம் - 628 752, தூத்துக்குடி மாவட்டம்.

அருள் ஆசியுரை

சிற்றம்பல மேய செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே!

மெய்யன்புடையீர்!

தங்கள் 26.2.07 திருமுகம் கிடைக்கப் பெற்றோம். நம் பாரத நாடு ஓர் புண்ணிய பூமியாகும். அதிலும் தென்தில்லை மன்று ளாடும் தென்பாண்டி நாடாகிய சிவலோகம். புனிதவதியார் என்ற காரைக்கால் அம்மையார் திருஞானசம்பந்தப் பெருமான் திருநாவுக்கரசர் இவர்கள் திருப்பாதம் தோய்ந்த புண்ணிய பூமியாகும். சிங்கவருமன், வல்லபன் ஆகிய மன்னர்களையும் நினைவுபடுத்துகின்ற இச்செப்பறை திருத்தலம் தொன்னெடுங் காலத்திலேயே துவங்கிய திருத்தலமாகத் திகழ்ந்திருக்கின்றதை அறிகின்றோம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இத்தனையும் இயற்கை வளம் பொருந்திய நெல்வயல் சூழ் நிறைந்து பசுமையாகப் பொருநை நதிக்கரையில் கண்கொள்ளாக் காட்சியாக அமையப் பெற்றுள்ளது, இச்செப்பறைத் திருத்தலமாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அகத்தியர், வாமதேவர், திருமால், அங்கியும், அத்திரி போன்ற மகரிஷிகளும் இங்கு வந்து தவம் இயற்றி பெருமானை வழிபட்ட தென்தில்லையாகிய செப்பறை திகழ்கின்றது. தவம் இயற்றத் தகுந்த புண்ணியதலமுமாகும்.

முழுதுங்கண்ட ராமபாண்டியன் செப்பறை அம்பலத்தில் ஆனந்தத் தாண்டவ காட்சி கண்டு அழகிய கூத்தர் என்று பெயரிட்டு அழைத்திருக்கின்றான் என்பதையும் அறிகிறோம்.

இங்குள்ள சிவாச்சாரியார் வேண்டுகோளுக்கிணங்கி அழகிய கூத்தருக்கு ஆலயம் அமைக்கும் பேற்றினைப் பக்தி நெறியில் திளைத்துள்ள ஆறை அழகப்ப முதலியார் அவர்கள் திருப்பணி செய்யும் பாக்கியம் பெற்று கோவில் அமைத்துள்ளதை அறிகின்றோம். இன்றும் பல சான்றுகளுடன் தளவாய் அறக்கட்டளை என்று பல நடந்து கொண்டிருக் கின்றது. இவர்கள் பரம்பரையில் தளவாய் (DTR) திரு. தீ.இராமசுவாமியவர்கள் பற்பல அருட்பணிகள் செய்து கொண்டிருப்பதையும் நாம் அறிவோம். மாதவச் சிவஞான சுவாமிகள் அகிலாண்டேஸ்வரி அம்மை திருப்பதிகம் பாடிய பெருமையுடைய தலமாகும். மேலும் சொல்லின் செல்வர் திரு. ரா.பி. சேதுப்பிள்ளையவர்கள் செப்பறை தொன்மை பற்றி எழுதியுள்ளதை அறிகின்றோம்.

இத்தனை பெருமையும் சிறப்பும் பெற்றுள்ள செப்பறை அருள்மிகு அழகிய கூத்தப் பெருமான் திருக்கோவிலுக்கு என் கடன் பணி செய்து கிடப்பதேயென்ற அப்பர் பெருமான் அருள்வாக்கை மேற்கொண்டு, 20-ம் நூற்றாண்டு அப்பராகத் திகழ்கின்ற சிவபூஜை செல்வர் திரு.சொ, சுந்தரம் பிள்ளையவர்கள் (இராசவல்லிபுரம்) நற்பணிகள் பல செய்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வருவதோடு, அருட்பணியாகிய சகல விதமான விழாக்களுக்கும் உறுதுணையாக விடாமுயற்சியோடு ஊக்கமுடன் தொண்டு செய்து வருகிறார்கள். இவர்களது அன்பும், பண்பும், ஒழுக்கம், பணிவும் உடைய இவர்களை மிகவும் போற்றி பாராட்டுகின்றோம்.

24.1.07 தேதியன்று மேலும் இத்திருக்கோயிலுக்கு அழகிய கூத்தருக்குத் திருத்தேர் திருப்பணி செய்து பெருமானுக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகமும் (அன்பர்கள் பலர் உதவியுடன்) சீரும், சிறப்புமாக நடைபெறச் செய்துள்ளதை மிகவும் பாராட்டுகின்றோம். இக்கோவில் சிவாச்சாரியர்களும் நன்கு பணிபுரிந்துள்ளதைப் பாராட்டுகின்றோம்.

தொண்டுள்ளம் படைத்துள்ள அன்பர்கள் பொருளுதவி செய்துள்ள புண்ணியர்கள், பணி செய்யவிருக்கின்ற அன்பர்கள் யாவரும் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வும், அருள்ஞான இன்பமும் பெற்றுத் திருப்பெருஞ் செல்வர்களாகத் திகழ ஆடவல்லானாகிய அழகிய கூத்தப் பெருமானை சிந்தித்து அருளாசி வழங்குகின்றோம். மலர் வெளியீடு செய்வதை போற்றுகின்றோம். நன்மை பெருகுக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

தவத்திரு. தருமை ஆதின சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் அருளிய

அருள் ஆசியுரை

"சிவனுறையுங் கோயில் சூழ்ந்து தாழ்ந்து இறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே," என்ற அப்பரின் அமுத வாக்கிற்கும், "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினோர்க்கு ஓர் வார்த்தை சொல் சற்குருவும் வாய்க்கும் பராபரமே," என்ற தாயுமானவரின் வாக்கிற்கும் ஏற்றவாறு தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ள செப்பறை ஸ்ரீ அழகிய கூத்தர் திருக்கோவிலின் தல வரலாறு சிறப்பான முறையில் எழுதி தயாரிக்கப்பட்டுள்ளது. முழுதுங்கண்ட ராமபாண்டியன் ஆலயம் அமைத்த வரலாறு, ஸ்ரீ அழகிய கூத்தப் பெருமான் செப்பறைப் பதிக்கு எழுந்தருளிய வரலாறு, ஆறை அழகப்ப முதலியார் ஆலயத்தை புனருத்தாரணம் செய்த வரலாறு முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கூடுதல் சிறப்பாக ஸ்ரீ அக்னிதேவன் அருளிய அஷ்டகம், செப்பறை மடாலய சுவாமிகள் தமிழில் மொழிப் பெயர்ப்பு செய்த ஸ்ரீ ருத்ரம், திருமுறைத் தொகுப்பு, முக்கியமான புகைப்படங்கள் ஆகியவை தொகுக்கப்பட்டு முழுப் பரிமாணத்துடன் திகழ்கிறது.

இச்செப்பறைத் தலத்திற்கு ஒப்பதென வைத்து செப்புதற்கு பிறவாய தலங்களும் இலாத' இத்திவ்வியமான தலத்தின் வரலாற்று நூலை நோக்குவோர் தவறாது வந்து ஸ்ரீ அழகிய கூத்தரை தரிசித்து உய்வர் என்பது திண்ணம்.

சுந்தரமூர்த்தித்தம்பிரான்
தென்மண்டலக் கட்டளை விசாரணை
தருமை ஆதீனம், திருநெல்வேலி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செப்பறைப்பூதம்
(ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயில்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதஞ்சலி முனிவர்   வியாக்ரபாதர் முனிவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

ஸ்ரீ மஹா கணபதி ஸஹாயம்

கும்பாபிஷேக அழைப்பிதழ்

இராஜவல்லிபுரம் செப்பறை

ஸ்ரீ அழகிய கூத்தர் திருக்கோயில்

(தாமிரசபை)

திருநெல்வேலி

புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகப் பத்திரிக்கை

விய ஆண்டு தை மாதம் 10-ம் தேதி

(24.01.2007) புதன்கிழமை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே. – சம்பந்தர்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

– அப்பர்

உடையாள் உன் தன் நடுவு இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன் அம்பலத்து எம்
முடியாய் முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன் நின்றே.

– மாணிக்கவாசகர்

உய்த்து ஆடித் திரியாதே உள்ளமே ஒழி கண்டாய் ஊன் கண் ஓட்டம்
எத்தாலும் குறைவு இல்லை என்பர்காண் நெஞ்சமே நம்மை நாளும்
பைத்து ஆடும் அரவினன் படர் சடையன் பரஞ்சோதி பாவம் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாம் அன்றே

–சுந்தரர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

–சேக்கிழார்

அண்ட பகிரண்டமும் அடங்க ஓர் நிறைவாகி, அன்றும் இன்றும் என்றும் உள்ள பொருளாய், சீர் சான்ற வேதச் செழும் பொருளாய், எப்பொருட்கும் எவ்விடத்தும் பிரிவற நின்று இயக்கம் செய்யும் சோதியாய், செப்புதற்கு அரிய செழுஞ் சுடராய், திரு நடம் புரியும் ஸ்ரீ நடராஜப் பெருமான், தண்பொருநை (தாமிரபரணி) நதியின் வடகரையில் உள்ள இச்செப்பறைப் பதியில் எழுந்தருளியுள்ளார். அரிய பொக்கிஷமான தாண்டவ மூர்த்தியை முதன் முதலாக வடித்த சிற்ப படிவம் இந்த தென் சிதம்பரம் என்னும் செப்பறைப் பதியில் தான் உள்ளது எனத் தல புராணம் கூறுகின்றது. கிருதயுகத்தில் அக்னி தேவனுக்கு திருநடனம் காட்டியருளிய பெருமான் அரி, அயன், அகத்தியர் ஆகியோருக்கும் திருநடன தரிசனம் அளித்த தலம் இதுவாகும்.

இத்தலத்தின் பெயர் செப்பறை என்று விளங்குவதால் பஞ்ச சபைகளில் ஒன்றான தாமிரசபை இது என ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

இதனை "திவ்வியமாய இச் செப்பறை தலத்தினுக்கு ஒப்பதென வைத்து செப்புதற்கு பிறவாய தலங்களும் உளவாமோ" என செப்பறை மான்மியமும் உறுதி செய்கின்றது.

உருகும் மனமும் சிவஞானம் உணரும் அறிவும் ஒருங்கே பெற்ற முழுதுங்கண்டராமபாண்டியன் என்னும் மன்னன் மணவை (தற்சமயம் மணப்படை வீடு என்றழைக்கப்படுகிறது)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்ற இடத்திலிருந்து நல்லாட்சி செய்து வந்தான். தினமும் காலை, மாலை இருவேளையும் திருநெல்வேலி நகர் உறையும் ஸ்ரீ நெல்லையப்பரையும், ஸ்ரீ காந்திமதி அம்மையையும் கால்நடையாகவே சென்று தரிசனம் செய்து பின் உணவு உண்ணும் நியமம் உடையவன். நதியில் வெள்ளம் வரும் சமயங்களில் தரிசனம் செய்ய இயலாமல் வருந்தினான். ஸ்ரீநெல்லையப்பர் பாண்டிய மன்னரின் கனவில் தோன்றி, "கவலை வேண்டாம். எம்மை பொருநையின் வடகரையில் உள்ள கிஞ்சா வனத்தில் திருக்கோவில் அமைத்து பிரதிட்டை செய்வதுடன், சிற்பி ஒருவன் சிதம்பரத்திலிருந்து முதன் முதலாக வடிவமைக்கப்பட்ட நடராஜ திருவுருவத்தை கொண்டு வருவான். அதனையும் அங்கு எழுந்தருளச் செய்து வழிபடுவாயாக" எனக் கூறியருளினார்.

அவ்வாறு பாண்டிய மன்னன் பொருநை நதிக்கரையில் திருக்கோவில் அமைத்து அதில் ஸ்ரீ நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதியையும் தில்லையிலிருந்து முதன் முதலாக வடிவமைக்கப்பட்ட நடராஜப் பெருமானையும் பிரதிட்டை செய்து பல நிபந்தங்களும் ஏற்படுத்தி வழிபாடு செய்தான்.

பின்பு ஒரு காலத்தில் தாமிரபரணி நதியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் அத்திருக்கோவில் சிதைந்து விட்டது. ஊர்மக்கள் ஸ்ரீ அழகிய கூத்தர் திருமேனியை இராஜவல்லிபுரம் ஸ்ரீ அக்னீஸ்வரர் கோவிலில் வைத்து வழிபட்டனர். சுமார் 400 வருடங்களுக்கு முன்பு திருநெல்வேலி நகர் தளவாய் முதலியார் குடும்பத்தினர் தற்சமயம் உள்ள திருக்கோவிலை கட்டுவித்தனர். பின்னாளில் குளத்தூர் ஜமீன்தார் குடும்பத்தினர் தாமிரசபையை அமைத்துச் சிறப்பித்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அழகிய கூத்தரின் திருக்கோவில், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிதி உதவி மற்றும் அன்பர்கள் நிதி உதவியுடனும் சீரிய முறையில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. ஆனந்த நிருத்தம் செய்யும் ஸ்ரீ அழகிய கூத்தர் பவனி வர புதிதாக திருத்தேர் ஒன்று அன்பர்களின் நிதி உதவியுடன் செய்யப் பெற்றுள்ளது. குடமுழுக்கு விழா அன்று மதியம் திருத்தேரோட்டமும் நடைபெற உள்ளது.

இப்பெருமானை வல்லதோர் இச்சையினால் வழிபடுவோர்க்கு செல்வம், கல்வி, புகழ், நன்மக்கட் பேறுவாய்க்கும் என்பது திண்ணம்.

இத்தகைய அளப்பரிய புகழ்பெற்ற இத்திருக்கோவிலின் கும்பாபிஷேகம் திருக்கயிலாயப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து 23-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிய பரமாச்சார்ய சுவாமிகள், த்ருமபுரம் ஆதீன 26-வது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், பெருங்குளம் செங்கோல் ஆதீன 102-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தர சத்திய ஞான பரமாச்சார்ய சுவாமிகள் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் 232-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிய ஞானப்பிரகாச பரமாச்சார்ய சுவாமிகள், திருப்பனந்தாள் காசித் திருமடத்து அதிபர் கயிலை மாமுனிவர் காசி வாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர்களின் நல்லாசியுடன் திருவருள் துணை கொண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிகழும் மங்களகரமான 1182-ஆம் ஆண்டு விய வருடம் தை மாதம் 10-ம் தேதி (2401.2007) புதன்கிழமையும் சுக்ல பக்ஷ ஷஷ்டி திதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சிவயோகமும் கௌலவ கரணமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை மணி 9.30க்கு மேல் 10.30க்குள்ளாக மீன லக்னத்தில் நிகழ்ச்சி நிரலில் காணும்வண்ணம் நடைபெற உள்ளது. விழாக்காலங்களில் காலையிலும், மாலையிலும் வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், சமயச் சொற்பொழிவு முதலியன நடைபெறும். கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ அழகிய கூத்தர் அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

திரு. சு. கசன் காத்த பெருமாள்
தக்கார், ஸ்ரீஅழகிய கூத்தர் திருக்கோவில்
செயலாளர் & பொருளாளர்
திருப்பணிக்குழு

சிவபூசை. க. திருஞானசம்பந்தம்
தலைவர்

சிவபூசை. சொ. சுந்தரம் பிள்ளை
செப்பறை கூத்தன் அடிமை
துணைத் தலைவர்,
மற்றும் உறுப்பினர்கள், திருப்பணிக்குழு

இப்படிக்கு
ஊர்மக்கள்
இராஜவல்லிபுரம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

1. தென்பாண்டி நாடே சிவலோகம்

"தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே" என்று மணிவாசகப் பெருமான் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாடிப் பரவியுள்ளார். தில்லைக்கும், நெல்லைச் சீமையின் செப்பறைக்கும் உள்ள ஆன்மீகத் தொடர்பு பற்றியே, மணிவாசகப் பெருமான் இவ்வாறு அருள்வாக்கு வழங்கியுள்ளார் என்பதை எண்ணுந்தொறும் உள்ளத்தில் பக்தி மணம் கமழ்கின்றது.

சிவலோகம் என்று தென்பாண்டி நாட்டினை தெய்வநெறி போற்றும் திருவாளர்கள் குறிப்பிடுவார்கள். தென்பாண்டி நாடான திருநெல்வேலிச் சீமைக்கு, அப்பர் பெருமான், திருஞான சம்பந்தப் பெருமான் ஆகிய அருளாளர்கள் எழுந்தருளி, பதிகங்கள் பாடி இறைவனைப் போற்றியுள்ளனர்.

<u>நால்வர் போற்றிய நெல்லைச் சீமை</u>

ஞானசம்பந்தப் பெருமான் பாடியுள்ள நெல்லைப் பதிகமும், திருக்குற்றாலப் பதிகமும், குறும்பலாப் பதிகமும் கிடைத்துள்ளன. அப்பரடிகள் பாடிய பதிகங்கள் கிடைக்க வில்லை. ஆனால் அப்பரடிகள், குற்றாலநாதரையும், செந்தில் மேய மணாளனாகிய முருகப் பெருமானையும் தமது பதிகங்களில் குறிப்பிட்டுள்ளார்.

திருச்செந்தூருக்கு அருகிலுள்ள ஆத்தூர் சிவன் கோயில் கல்வெட்டு ஒன்று நாவுக்கரசர் பற்றிக் குறிப்பிடுகின்றது.

இவற்றால் நாவுக்கரசர் நெல்லைச் சீமைக்கு எழுந்தருளி இருக்கிறார் என்று கருத இடம் உண்டு.

மணிவாசகப் பெருமானும் குற்றாலத்தில் அமர்ந்துறையும் கூத்தனைக் குறிப்பிடுகின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காரைக்காலம்மை திருப்பாதம் பட்ட சீமை

புனிதவதியார் என்ற காரைக்கால் அம்மையார் தமது கணவர் வாழ்ந்த தென் தமிழ்நாட்டிற்குத் தமது பெற்றோருடன் வந்தார் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். தென் தமிழ் நாட்டில் கி.பி. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டில் குலசேகரப்பட்டினம் (கொற்கை அழிந்த பின்னர்) சிறந்த துறைமுகமாக விளங்கியது. இந்தத் துறைமுகப் பட்டினத்திலே, காரைக்காலம்மையார் கணவர் கடல் வழியாக வந்து வணிகம் செய்தார் என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தத் துறைமுகப் பட்டினமாகிய குலசேகரப் பட்டினத்திற்கே, அம்மையார் தமது பெற்றோர்களுடனும், உற்றார் உறவினர்களோடும் வருகை தந்தார் என்று எண்ணுவதற்கு இடம் உண்டு. அம்மையார் வருகையை அறிந்த அவரது கணவர், இரண்டாவது மனைவியோடும், குழந்தையோடும் வந்து, அம்மையாரை வணங்கி, குழந்தைக்கும் அம்மையார் பெயரைச் சூட்டி உள்ளேன் என்று பணிந்து கூறினார்.

அம்மையார் அதுவரை கணவருக்காகத் தாங்கியிருந்த ஊன்பொதி உடலை உதறி, பேய் வடிவம் கொண்டு எம்பெருமானை நாடி இமயம் நோக்கிப் பயணமானார்.

சிவப்பரம்பொருளால் அம்மையே என்று அழைக்கப் பெற்ற அம்மையாரின் புனித திருவடிகள் தென்பாண்டிச் சீமையில் பட்டு புனிதப்படுத்தின.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ. செப்பறையின் தொன்மை

தென்பாண்டி நாட்டினைச் சிவ மணம் கமழச் செய்த அருளாளர்களின் புனித திருவடிகள் பொற்புடன் பெற்று அற்புதமான அருளைப் பெற்ற நெல்லைச் சீமையில் அமைந்த திருத்தலம் செப்பறை.

திருநெல்வேலி நகரத்திலிருந்து வடகிழக்கே ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில், பொருநை என்று போற்றப்படும் தாமிரபரணி ஆற்றின், வடக்குக் கரையில் அமைந்துள்ள செப்பறை பற்றிப் பேராசிரியர் முனைவர். சொல்லின் செல்வர். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் வரலாற்று முறையோடு சிறப்பாக எழுதியுள்ளார்கள்.

"தென்பாண்டி நாட்டிற்குப் பெருந்தொண்டு செய்த பாண்டியன் ஸ்ரீ வல்லபன் என்று கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது. தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள மணப்படைவீடு அம் மன்னனுக்குரியது. அப்படைவீடு ஸ்ரீ வல்லபன்மங்கலம் என்ற ஊரின் ஓர் அங்கமாக அமைந்திருந்தது என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகிறது. அவ்வூர் அருகே கொட்டாரம் என்னும் பெயருடைய சிற்றூர் காணப்படுகிறது. கொட்டாரம் என்பது அரண்மனையைக் குறிக்கும். இவ்வூர்கள் செப்பறைக்கு எதிர் கரையில் உள்ளன.

செப்பறை என்ற சொல் செம்பினால் ஆகிய அறை என்று பொருள்படும். செப்புத் தகடுகள் பொதிந்து கோட்டையின் மதில்களை வலுப்படுத்தும் முறை முன்னாளில் இருந்தது. எனவே செப்பறையில் சிறந்த கோட்டை இருந்திருக்கும்".

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இராசவல்லிபுரம்

செப்பறை இராசவல்லிபுரத்தில் இருந்து தெற்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இராசவல்லிபுரம் பழமையான திருநகராகத் திகழ்ந்திருக்கிறது. இவ்வூரைப் பற்றியும் அதன் தொன்மையினைப் பற்றியும் அவ்வூரில் பிறந்த சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் "செப்பறைக்கு அருகில் இராஜவல்லிபுரம் என்னும் பெயருடைய சிற்றூர் ஒன்றுள்ளது. சாசனத்தில் இவ்வூர் ராஜவல்லவபுரம் என்று குறிக்கப்படுகிறது. இவ்வூரில் ஸ்ரீ வல்லபன் என்னும் பாண்டிய மன்னனது கைவண்ணம் விளங்கக் காணலாம்" என்று சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்கள். செப்பறை, பழங்காலத்தில் மிகச் சிறந்த நகராக மிளிர்ந்திருக்க வேண்டும். இவ்வூரைச் சுற்றியுள்ள மணப்படைவீடு, கொட்டாரம் (அரண்மனை) போன்ற ஊர்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களின் அருளைப் பெற்ற சிங்க வருமன் காலம் மிகப் பழங்காலம். நினைவிற் கெட்டாத நெடுங் காலமான சிங்கவரும்ன் காலத்தில், செப்பறை சொல்லப்பட்டிருக்கிறது என்பதை எண்ணுகிற போது செப்பறை மிகத் தொன்னெடுங் காலத்திலேயே துலங்கிய திருத்தலம் என்று நன்கு தெரிகிறது.

இயற்கை எழில்

அழகான இயற்கைச் சூழல். பொங்கி வரும் பொருநைப் பேராறு. ஓங்கி உயர்ந்த செழித்து வளர்ந்து நிற்கும் பனைமரங்கள் பசுமையான வயல்கள். பார்க்கும் இடம் எங்கும் பச்சைப் பசேல் என்று கண்ணிற்குக் குளிர்ச்சித் தரும் சோலைகள், மலர்ச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செடிகள். மலர்ச்செடிகளிலும், மரங்களிலும் மலர்ந்திருக்கும் மலர்கள். மலர்களில் தழுவி வரும் மணமிகுந்த குளிர்ந்த காற்று, கண்ணையும், கருத்தையும் கவரும் பற்பல குளங்கள். இவற்றில் மலர்ந்திருக்கும் குவளை தாமரை மலர்கள். குளங்களில் துள்ளி மகிழும் மீன்கள். மீன்களைப் பிடித்திடத் துடிக்கும் நாரைகள், மீன் கொத்திப் பறவைகள், நாரைகள் எழுப்பும் ஒலிகள், அவை பறந்து பறந்து மீனைப் பிடித்திட முயலும் காட்சிகள் அத்தனையும் கண்கொள்ளாக் காட்சிகள்.

முனிவர்கள் தனித்திருந்து தவம் செய்யத் தக்க இடங்கள். ஆங்காங்கே இடிந்து சிதறிக் கிடக்கும் சிறிய மண்டபங்கள். பழங்காலக் கோட்டைகளை நினைவுப்படுத்தும் வண்ணம் அழிந்து கிடைக்கும் சின்னங்கள்.

<u>தவம் செய்யத் தகுந்த இடம்</u>

இந்த அழகிய இயற்கைச் சூழலில் எத்தனை எத்தனையோ மகான்கள், முனிவர்கள் வந்து தவமியற்றி இறைவனை வழிபட்டு வந்தனர் என்பதற்கு வரலாற்றுச் செய்திகளும் உண்டு. தமிழ் பிறந்த பொதிகை மலையில் வாழ்ந்த அகத்தியரும், வாம தேவரும், திருமாலும், அங்கியும், அத்திரி போன்ற முனிவர்களும் இங்கு வந்து தவமியற்றி இறைவனை வழிபட்டுச் சென்றிருக்கின்றனர்.

இத்திருத்தலத்தில் செப்பறை மடம், திருவள்ளுவர் மடம், சேக்கிழார் திருமடம் போன்ற தெய்வ மடங்களும் இருந்திருக் கின்றன.

இங்கிருந்த செப்பறை மடத்தில் கலைத்துறையிலும், கடவுள் நெறியினைப் போற்றுவதில் தேர்ந்த தெய்வத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாளர் பலர் அமர்ந்து அடியார்களுக்கு அருளுரை வழங்கியிருக்கிறார்கள். தென் கலையினையும், வட கலையினையும் செப்பறை மடத்திலிருந்து வளர்த்திருக்கின்றனர்.

இருநூற்று எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த நல்லறிஞர் செப்பறை மடத்திற்கு வந்தார். கனக சபாபதி தேசிகரை மடத்தில் சந்தித்தார். கனக சபாபதி தேசிகரிடம் பாடம் கேட்டார். பாடம் கேட்டதின் பயனாக இலக்கணக் கொத்து முதலாய நூல்களையும் இயற்றினார். செப்பறை மடத்தையும் அவரது ஆசான் கனக சபாபதி தேசிகரையும்,

"செப்பறைப் பதியில் வாழ்சிவத் துவிசன்
கனக சபாபதி கருது வடநூற் கடல்
தபோதனர் புகழும் சைவாதிராசன்
உபய பதங்களை உண்மையோடு பணிவாம்"

என்று சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இன்றைய நிலை

தெய்வம் மணக்கும் செப்பறையில் இன்று சிவப்பரம் பொருளின் திருக்கோயில் மட்டுமே உள்ளது.

ஒரு காலத்தில் தேரும் தேரோடும் வீதிகளும், மாட மாளிகைகளும், வேத விற்பன்னர்கள் தங்கியிருந்த வீதிகளும், திருமடங்களும், திருக்கோயில் பட்டர்கள் தங்கியிருந்த தெருக்களும், திருக்கோயில் பணியாளர்கள் வாழ்ந்த இடங்களும், பசு மண்டபங்களும், பண்டிதர்களின் உறைவிடங்களும், தேவாரப் பதிகங்கள் பாடிடும் திருவிடங்களும், அறச்சாலைகளும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆதுலர் சாலைகளும் நிறைந்திருந்த செப்பறையில் இன்று, குடியிருப்போர் யாருமில்லாமல் தனிப் பெரும் திருக்கோயில் மட்டுமே உள்ளது.

<u>தில்லையும், நெல்லைச் செப்பறையும்</u>

அழகிய கூத்தப் பெருமானும் சுவாமி நெல்லையப்பரும் அன்னை காந்திமதியும் திருக்கோயிலில் அருட்கோலோச்சு கின்றனர்.

இந்தத் திருக்கோயில், தென் சிதம்பரம் என்றும், தென் தில்லை என்றும், செப்பறையம்பலம் என்றும் வழங்கப் பெற்று வருகிறது.

தென்தில்லையான செப்பறை பதியில் எழுந்தருளி இருக்கும் தெய்வமான அழகிய கூத்தரின் அழகினைக் காணக் கண்கோடி வேண்டும்.

வடக்குத் தில்லையான சிதம்பரத்தில் பதஞ்சலிக்கும், வியாக்கிரபாதருக்கும் ஆடிக்காட்டிய அற்புதக் கூத்தினை,

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திறையாட
மறை தந்த பிரம்மனாட
கோனாட வானுலகக் கூட்டமெல்லாமாட
குஞ்சரமுகத்தானாட
குண்டலம் இரண்டுமாட தண்டை புலியுடையாட
குழந்தை முருகேசனாட

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஞானசம்பந்தரோடு இந்திராபதினெட்டு முனி
அஷ்ட பால கருமாட
நரை தும்பையரு காட நந்திவா கனமாட
நாட்டிய பெண்களாட
வினையோட உனைபாட எனை நாடி இதுவேளை
விருதோடு ஆடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லை வாழ் நடராஜனே"

என்று உலக உயிர்கள் அனைத்தும் ஆனந்தக் கூத்து ஆடின என்கிறார் நடராசபத்தில் பெரும் புலவர் முனியசாமி.

தென் தில்லையான செப்பறையில் அப்பெருமான், அகத்தியர், வாமதேவர், அங்கி, நான்முகன், திருமால் ஆகியோர் பிறவிப் பயன் எய்திட ஆனந்த தாண்டவம் புரிந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

3. செப்பறை மான்மியம்

உயிர்கள் உய்ந்திட ஆனந்த தாண்டவம் புரியும் அழகிய கூத்தர் இங்கு எழுந்தருளிய வரலாற்றினை, செப்பறை மான்மியம் என்ற புராண நூல் சுவைபடச் சொல்லுகின்றது. செப்பறையைச் சேர்ந்த, சிவஞானத் திருத்தளியைச் சிதம்பரத்தில் நிறுவிய சுவாமிகளாலும் செப்பறை மடத்தின் தலைவர் அருணாச்சல தேசிகர் அவர்களாலும் கிஞ்சாவன மகாத்மியம் என்ற வடமொழி நூலிலிருந்து இது மொழிபெயர்க்கப் பெற்றது. இதனை உரை நடையாக எழுதியவர் பெருந்தகை சங்கர சுப்பிரமணிய பிள்ளை. இந்த நூல் 1905-ஆம் ஆண்டு அச்சாகியது.

செப்பறை சுவாமிகளால் நிறுவப்பட்ட சிவஞானத் திருத்தளி, சிதம்பரம் செங்கழுநீர் பிள்ளையார் கோவில் தெருவில் இன்றும் உள்ளது. இத்திருத்தளிக்குப் பக்கத்து வீட்டில் தான், சொல்லின் செல்வர் டாக்டர். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய போது குடியிருந்தார்கள்.

சிவஞானத் திருத்தளியை நிறுவிய செப்பறை சாமிகள், மொழி பெயர்த்த செப்பறை மான்மியம், பத்துப் பகுதிகளைக் கொண்டது.

<u>பத்துப் பகுதிகள்</u>

முதல் பகுதி புரா்ண வரலாற்றைக் கூறுவது. நைமிசாரண்ய முனிவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சூதமா முனிவர் கூறும் முறையில் அமைந்துள்ளது.

இரண்டாம் பகுதி இத்திருத்தலத்தின் மூர்த்தி, தலத்தின் பெருமை, தீர்த்தம் ஆகியவற்றைச் சிறப்பித்துச் சொல்வது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மூன்றாவது பகுதி அக்னி தேவனுக்கு ஆடல் காட்டி அருளிய பகுதியாகும்.

கங்கை கொண்டான் ஊருக்கு புளியவனம் என்றொரு பெயருண்டு. அப்புளிய வனத்தில் கிருதயுகத்தில் சிவப்பரம் பொருளை நினைந்து கடுந்தவம் புரிந்தான் அக்னி. அதனால் கயிலைநாதனுக்கு நெற்றிக் கண்ணாக அமையும் அருளைப் பெற்றான். சிவப்பரம் பொருளை நினைந்து, அட்ட மூர்த்தத்துள் ஒன்றாகிய பேறு பெற்றிட வேண்டித் தவம் செய்தான். தவம் செய்திடத்தக்க இடமாகச் செப்பறையைக் கொண்டான். இது புளியவனத்தின் தென்கிழக்கு எல்லையாகவும், வடகிழக்கு எல்லையாகவும் அமைந்து, இரண்டும் ஒன்று கூடும் முறையில் அமைந்துள்ளது. இந்த இடத்தில் அக்னி தீர்த்தத்தையும் உருவாக்கினான். அக்கினீஸ்வரரையும் உருவாக்கி, தண் பொருநையாற்றில் நீராடி நெறிகள் பிறழாமல் நீண்ட நெடிய தவம் புரிந்தான். பொருநையாற்றின் வடகரையில் இலிங்கத் திருமேனியை உருவாக்கி, உள்ளம் கசிய வழிபட்டு வந்தான். எம்பெருமானே "நின் தன் ஆடல் காண வேண்டும்" என்று அகங் குழைந்து வழிபட்டான் அக்னி தேவன். அக்கினி தேவன் தோத்திராட்டகம் செய்து, எம்பெருமானிடம் இறைஞ்சினான். வேண்டியவர்க்கு வேண்டுவன உவந்து ஈயும் எம்பெருமான், தமது ஆனந்தத் தாண்டவக் கூத்தினை அக்கினி தேவனுக்குக் கிருதா யுகத்தில் ஆடிக் காட்டியருளினார்.

ஆலைபடு கரும்புச் சாறு போல் அண்ணிக்கும் நாமமுடைய எம்பெருமானின் ஆனந்த நடனம் கண்டு அக்கினி எல்லையற்ற ஆனந்தம் கொண்டு, "பெருமானே தாங்கள் என்றென்றும் இப்பதியில் அடியார்கள் கண்டு மகிழ ஆனந்த நடனமாடி அருள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சொல்லின் செல்வர் வழங்கிய மணி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொடிமரம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாலிக்க வேண்டுமென" வேண்ட, எம்பெருமானும் அக்னியின் வேண்டுகோளுக்கு இணங்கி இன்றும் ஆனந்த நர்த்தனம் செப்பறையில் புரிந்துக் கொண்டிருக்கிறார்.

பொதிகையில் என்றென்றும் தவமியற்றித் தமிழையும், தண்ணருளையும்தந்துக் கொண்டிருக்கும் அகத்திய மாமுனிவர் வேண்டிட அவருக்கு ஆனந்த நடனம் காட்டிய பகுதி நான்காம் பகுதியாகும்.

வாமதேவருக்கும், திருமாலுக்கும், நான்முகனுக்கு ஆனந்த நடனக் காட்சியைக் காட்டியருளிய பகுதி ஐந்தாம் பகுதியாகும்.

ஆறாம் பகுதி, மணப்படை நகரிலிருந்து அரசாண்ட முழுதுங் கண்ட ராமபாண்டியனுக்கு கனவுக் காட்சியைக் கூறும் பகுதி. "பாண்டிய மன்னனே உன் அரண்மனைக்கு முன்னர் வடக்கிலிருந்து ஒரு சிற்பி கொண்டு வரும் எம் திருமேனியை எழுந்தருளச் செய். கூத்தர் வடிவிலுள்ள அந்தத் திருமேனியை எறும்புகள் நுழையும் குழியருகே எழுந்தருளச் செய்" என்று அருளாணையிட்ட பகுதியாகும்.

சிற்பி,சிதம்பரம் திருக்கோயிலுக்கு முதன் முதலிற் செய்த கூத்தப் பெருமான் செப்புத் திருமேனியை காவித் துணியில் வைத்துப் பொதிந்து, தலைச்சுமையாகத் தென்திசை நோக்கி வந்தான். இந்தச் செப்புத் திருமேனி உனக்குச் சுமக்க முடியாமல் கனத்திடும் போது கீழே வைத்துவிடு என்ற இறைவன் ஆணையிட, அந்தத் திருமேனி செப்பறைக்கு வந்த போது சிற்பிக்குக் கனத்தமையால் கீழே வைத்துவிட்டான். வைக்கப்பெற்ற அந்தத் திருமேனியை மீண்டும் சிற்பியால் எடுக்க இயலவில்லை. செப்புத் திருமேனி செப்பறையிலேயே நிலைத்து விட்டது. இவற்றை ஏழாம் பகுதி விளக்குகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எட்டாம் பகுதி முழுதுங்கண்ட இராமபாண்டியனுக்கு ஆனந்த தாண்டவம் ஆடிக் காட்டிய பகுதி. ஆடிய ஆடல் வல்லான் திடீரென மறைய பாண்டியன் கலங்கிச் செப்பறையில் மீண்டும் கூத்தினைக் கண்டு, "அழகிய கூத்தா" என்று பெயரிட்டு அழைத்த பகுதியைக் கூறுவதாகும்.

ஒன்பதாவது பகுதித் திருக்கோயில் பற்றியது எறும்புக்குழி கண்ட இடத்தில் நெல்வேலி நாதருக்கும் - காந்திமதி அம்மைக்கும் அழகிய கூத்தருக்கும் திருக்கோயில் கட்டியதைத் தெரிவிக்கும் பகுதி.

பத்தாவது பகுதி இராசவல்லிபுரம் பற்றிய பகுதி. பொருநை ஆற்றிற்கு தெற்கேயுள்ள மணவை மன்னன் தன்னைக் காணவரும் அரசர்கள் தங்குவதற்கு நகர் ஒன்றை அமைத்தான். அதற்கு இராசவல்லிபுரம் என்று பெயர் சூட்டினான். "நடராச" என்ற பெயரில் கடையில் வரும் "ராச" என்பதையும், "சிவகாமவல்லி" என்ற பெயரில் ஈற்றில் வரும் "வல்லி" என்பதையும் இணைத்து இராசவல்லிபுரம் என்று பெயரிட்டான் என்கிறார். செப்பறை வரலாற்றை எழுதியுள்ள அறிஞர். கி. சுப்பிரமணியன் அவர்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0: In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

4. பத்துப் பகுதிகளின் விளக்கமான வரலாறு

செப்பறை மான்மியத்தில் பத்துப் பகுதிகளாக வரும் இவ்வரலாற்றை கற்போருக்கு விளக்கமாகக் கூறிட பத்துப் பகுதிகளும் ஓரளவிற்குச் சிறிது விளக்கமாகக் கீழே தரப் பெறுகின்றது.

மணப்படை நகரிலிருந்து ஆட்சி செய்து வந்த முழுதுங் கண்ட ராமபாண்டியன், நாள்தோறும் நெல்லைக்குச் சென்று, நெல்லையப்பரையும் காந்திமதி அன்னையையும் வழிபட்டு வருவது வழக்கம். வழிபட்ட பின்னரே உணவு கொள்ளும் கொள்கையினையும் கொண்டிருந்தான்.

இவ்வாறு இருக்கையில் பொருநையாறு பொங்கித் ததும்பி, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. அதனால் மன்னனால் நெல்லைக்குச் செல்ல இயலவில்லை. நெல்லையப்பரையும் காந்திமதி அன்னையினையும் வழிபட முடியவில்லையே என்று உள்ளம் கலங்கினான். உணவும் கொள்ளவில்லை. அன்றிரவு இறைவன் மன்னன் கனவில் தோன்றி, மன்னவனே மனம் கலங்காதே. நீ வனத்தில் போய் தேடு. ஓரிடத்தில் காற் சிலம்பொலி கேட்கும். அவ்விடத்தில் எறும்பு சாரைச் சாரையாகத் திரியும். அவ்விடத்தில் எனது வடிவத்தைக் காண்பாய். யாம் அங்கே எழுந்தருள்வோம். கோயில் கட்டப்பட வேண்டிய இடத்தை எறும்பு குழி காட்டும் எனக் கூறியருளினார்.

கண்விழித்த காவலன் கங்கு கரையற்ற மகிழ்வோடு திகழ்ந்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்நிலையில், தில்லைத் திருத்தலத்தில் தெய்வீக நிகழ்ச்சி நடந்தது. சிங்கவர்மன் என்ற மன்னன் தன்மாட்டு உள்ள நோயால் அரச இலக்கணம் குறைப்பட்டுள்ளது என நினைந்து, நாட்டை விட்டு காட்டிற்கு வந்தான். காட்டில் கடுந்தவத்தை மேற்கொண்டான். தவத்தின் வெம்மையாலும், கதிரவனின் கதிர்களாலும் நாவறண்டு தண்ணீர் வேட்கையால் தவித்தான். தக்க வழிப்போக்கன் வாயிலாகக் தடாகத்திற்கு வந்திட, அங்கு புலிக்கால் முனிவரும், பதஞ்சலியும் தவத்திலிருப்பதைக் கண்டு அவர்களை வணங்கினான். அவர்களின் அருளுரை வண்ணம் தில்லை யிலுள்ள சிவகங்கைப் பொய்கையில் மூழ்கிடப் பொன்னார் மேனியும் கொண்டான். பொன்னார் மேனியைப் பெற்ற மன்னன் (இனிக் காட்டிலேயே தவம் புரிவேன் என்றான்) முனிவர்களை நோக்கித் தாங்கள் இவ்வனத்தில் அச்சமின்றி எழுந்தருளியிருப் பதனை அறிந்துக் கொள்ளலாமா? என்றான். முனிவர்கள் இந்த வனம் தில்லைவனம். இந்தப் பொய்கை சிவகங்கை. ஆடற் பெருமானின் ஆனந்த தாண்டவம் எங்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறது என்றிட, "முனிவர் பெருமக்களே அந்த ஆனந்த தாண்டவத்தை அடியேனும் கண்டு பாக்கியம் பெற்றிட அருள வேண்டும்" என்றான். முனிவர் பெருமக்கள் முக்கண்ணனிடம் முறையிட, அப்பெருமான், மன்னனுக்கு ஆனந்த நடனத்தைக் காட்டியருளினார். கண்டு கழி பேருவகை கொண்ட மன்னன் அங்கேயே இருந்து தவம் புரிவேன் என்றிட, முனிவர்கள் மன்னனை நோக்கி, "நாட்டிற்குச் சென்று மக்களை காத்து நலம் செய்திடுதல் உனது கடமையாகும். அவ்விதமே அரசாட்சி செய்து பழிவராமல் காப்பாயாக", எனக் கூறினர். மன்னனும் நாடு திரும்பி நடராசப் பெருமானுக்குத் திருக்கோயில் கட்டி நாள் வழி பாட்டிற்கும் வகை செய்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடேசப் பெருமானின் திருமேனியை அமைத்திட தாமிரம் தந்து சிற்பிகளை உருவாக்கச் செய்தான். சிற்பிகள் அழகியதோர் நடராசர் திருமேனியை உருவாக்கினர். தாமிரத் திருமேனியைக் கண்டு வியந்து மன்னன் பொன் கொடுத்து பொன்னால் வேறு திருமேனி செய்திட சிற்பிகளுக்கு ஆணையிட்டான். சிற்பி பொன்னை உருக்கி கருவில் சேர்க்க முற்படும் பொழுது இறைவன் மாறுவேடம் தரித்துத் தன்னிடமிருக்கும் சிறிய செப்புக்காசையும், பொன்னோடு சேர்க்க வேண்டும் என்றிட சிற்பிகள் மறுத்தனர். வேடதாரியான இறைவன் கெஞ்சியதால் சிறிய செப்புக்காசைச் சேர்த்தனர். பொன்னார்ந்த திருமேனி, மீண்டும் செப்புப் படிவமாயிற்று. மன்னனுக்குச் செய்தி சென்றது. பொன் தந்தும் செப்புத் திருமேனி செய்த சிற்பிகள் ஏமாற்றியதாக நினைத்து சிறையிலிட்டான். இறைவன் மன்னனின் கனவில் தோன்றி உண்மையை உணர்த்தினான். மன்னனிடம் இக்கலியுகத்தில் இக்கால நிலையை உத்தேசித்து யாமே அச்சிற்பத்தை செப்புத் திருமேனியாக மாற்றினோம். இந்தச் செப்புத் திருமேனி பொன் திருமேனியாக உன் கண்களுக்கு மட்டும் பொன்னாகப் பொலியும் என்று கூறிட அந்தப் பொன்னார் திருமேனியைத் தானமைத்தத் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்தான்.

இறைவன் மன்னன் கனவில் தோன்றி, "மன்னனே சிற்பி முதலில் செய்த செப்புத் திருமேனியைச் சிற்பியிடம் கொடுத்து அவனைத் தென்திசை நோக்கிச் செல்லும்படி சொல் எனக் கூறினார்". சிற்பியிடமும், "சிற்பியே நீ முதலில் செய்த செப்புத் திருமேனியைத் தலையால் தாங்கிச் செல். எப்போது உனக்கு அது பாரமாகத் தென்பட்டதோ அந்த இடத்தில் இறக்கி வைத்திடு"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்றார். சிற்பி அரசனிடம் இதைக் கூறிட அரசனும் செப்புத் திருமேனியைக் காவித் துணியில் பொதிந்து மங்கல முழக்கத்தோடு சிற்பிக்குப் பொன்னும் பொருளும் தந்து அனுப்பி வைத்தான்.

எம்பெருமான் திருமேனியைத் தலையால் தாங்கி வந்த சிற்பி, பொருநைக் கரையை அடைந்து தாருகாவனத்திற்கு அண்மையில் சத்தியகிரிச் சாரலையடைந்தபொழுது பாரம் கனத்தது. சிற்பி, அந்தச் செப்புத் திருமேனியை இறக்கி வைத்தான்.

இறைவன் அரசனாகிய முழுதும் கண்ட ராமபாண்டியனுக்கு அருள் செய்திட திருவிளையாடல் புரிந்தார். சிற்பியைக் கண்ணுறங்க வைத்தார். கண்விழித்த போது செப்புத் திருமேனியைக் காணவில்லை. கலங்கினான் சிற்பி. பாண்டிய மன்னனிடம் முறையிட்டான்.

மன்னன் இறைவன் படிமத்தை காண முடியவில்லை என்று ஏங்கினான். காவலர்களுக்கு தேடிக் கண்டுபிடிக்க ஆணையிட்டான்.

கலங்கிய மன்னது செவிகளில் தாரை, தப்பட்டை, சங்கு, சேண்டி, தேவதுந்துபி போன்ற வாத்தியங்கள் முழங்க இலிங்கத்தின் பின்னணியில் ஆனந்த கூத்தர் ஆனந்த கூத்து ஆடினார். தெய்வீக இசையினையும், கூத்தினையும் கேட்டும், கண்டும் மகிழ்ந்த அரசன் மகிழ்ச்சி பொங்க "அழகியகூத்து உடையானே எம்நாட்டில் எழுந்தருள வேண்டும்" என இறைஞ்சி நின்றான். அழகிய கூத்து உடையாரும் அரசனது வேண்டுக் கோளை ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கும் வண்ணம்

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிலம்பொலி எழுப்பிட மன்னன் மாறில்லா மகிழ்ச்சியில் மகிழ்ந்தான்.

அழகிய கூத்தனுக்கு ஆலயம் எடுக்க வேண்டும் என அவா கொண்டு முன்பு சிலம்பொலி கேட்ட எறும்பு குழி இருந்த இடத்தில் அழகியதொரு ஆலயம் அமைக்க எண்ணினான். இந்தத் திருத்தலம் தென்தில்லை என்றும் செப்பறை அம்பலம் என்றும் தாமிரசபை என்றும் வழங்கப்படும் என்று எல்லையற்ற மகிழ்ச்சியோடு அறிவித்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. ஆலயம் அமைத்தல்

எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்த மன்னன், சிற்பிகளை அழைத்து ஆலயம் அமைத்திடக் கூறினான். சிற்பிகளும், கருப்பக் கிரகம், அர்த்த மண்டபம், நடேச பெருமானுக்குச் செப்பறை மண்டபம், மகா மண்டபம், மணி மண்டபம், திருமதில், தேர் திருக்கோபுரங்கள் அமைத்து செப்பறையில் அழகிய கூத்தரை எழுந்தருளச் செய்தான். நெல்வேலி நாதரையும் காந்திமதி அம்மையினையும் எழுந்தருளச் செய்து, குடமுழுக்கு நடத்தி நாள் வழிபாட்டிற்கும் திருவிழாக்கள் நடக்கவும், வழிவகை செய்ய நிபந்தங்கள் கொடுத்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6. பொங்கி எழுந்தது பொருநை

காலச் சக்ரம் சுழன்றது. கொல்லம் ஆண்டு 896-ஆம் ஆண்டு அதாவது கி.பி. 1721-ல் கார்த்திகைத் திங்கள் 12-ஆம் நாள், செப்பறைக் கோயிலுக்குப் பெருஞ் சோதனை ஏற்பட்டது. சிவாச்சாரியார் அன்று பூசனை புரிந்தார். நடையும் திருக்காப்பு இடப்பட்டது. இல்லத்திற்குப் புறப்பட்ட போது இடிமுழக்கத் தோடு பெருமழை பொழிந்தது. கண்ணைப் பறிக்கும் மின்னலும் கனமழையும், மக்களை அச்சுறுத்தின. ஊழிக்கூத்து நிகழ்கிறதோ என்று ஊர் மக்களெல்லாம் நிலைகுலைந்தனர். பொருநையாறு பொங்கி எழுந்தது. பொங்கி வந்த பெரு வெள்ளத்தால் ஆறு திசை மாறியது. திருக்கோயிலையும் ஊரையும் சுற்றி வளைத்து விழுங்கியது. சிவாச்சாரியார் அருகிலுள்ள பனைமரத்தின் மீது ஏறி, அஞ்செழுத்து மந்திரத்தை ஓதிக் கொண்டேயிருந்தார். கண் துஞ்சாது வாடைக் காற்றிலும், மழையிலும் துவண்டு வெள்ளம் வடியும் வரை மரத்திலிருந்து, வடிந்த பின்னர் இறங்கியவர் எங்கிருக்கிறோம் என்று திகைத்தார். திருக்கோயில் காணப்படவில்லை. பூத வாகனமும் காணவில்லை. தேரோடிய வீதிகளும் தென்படவில்லை. வீடுகள், வீதிகளில் இல்லை. மக்கள் இருந்த சுவடே தெரியவில்லை. அத்தனையும் அடித்துச் செல்லப் பட்டு விட்டன. தட்டுண்டு தடுமாறி அருகிலுள்ள ராஜவல்லி புரத்திற்குச் சென்று, ஊர் மக்களிடம் ஊழிக் கூத்தைப் பற்றிக் கூறிட ஊர்மக்கள், செப்பறைக்கு வந்தனர். திருக்கோயிலையும், ஊரையும் காணாமல் கண்ணீர் உகுத்தனர். தாயைக் காணாத கன்று போல் கலங்கிக் குலைந்தனர். அழகிய கூத்தரின் திருமேனியும், பிற திருமேனிகளும் எங்காவது உள்ளனவா என்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேடினர். தேடிய செப்புப் படிவங்கள் கிடைத்தன. அவற்றை ராஜவல்லிபுரத்திற்குக் கொண்டு வந்து, அக்னீஸ்வரர் ஆலயத்தில் வைத்து வழிபட்டு வந்தனர்.

தவித்தார் சிவாச்சாரியார்

ஆண்டாண்டு காலமாக உள்ளம் உருகி வழிபாடு செய்து வந்த சிவாச்சாரியாரின் உள்ளம் கலங்கியது உணவைக் கூட இழந்து தவித்தார். சிவாச்சாரியார் கண் கலங்கியது. உணர்வையும் இழந்து தவித்தார் சிவாச்சாரியார் கண் கலங்கிக் கலங்கித் தேம்பி தேம்பி அழுதார். அழுத களைப்பால் கண்யர்ந்தார். கனவில் வந்தார் கூத்தப் பெருமான். "சிவாச்சாரியரே, நீவிர் வழிபட்டு வந்த கோயிலும் கோயில் சார்ந்த ஊரும் அழிந்த விட்டதே என்று கவலை கொள்ளாதே. திருநெல்வேலி நகருக்குச் சென்று ஆறை அழகப்ப முதலியாரைக் கண்டுவா. முதலியார் ஆவன செய்வார்" என்றிட சிவாச்சாரியார் விழித்தார். விழிகளில் நம்பிக்கை உணர்வையும், நாயகன் அருளையும் தாங்கி அழகப்ப முதலியாரைக் கண்டிட, நெல்லை நகருக்கு வந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. ஆறை அழகப்ப முதலியார்

ஆறை அழகப்ப முதலியார் நெல்லைச் சீமையை ஆண்டு அரசர் போன்று அமர்ந்து நிர்வாகம் செய்து வந்த பெருந்தகையாளர். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் (அதாவது 1726) நெல்லைச் சீமை இவரது நிர்வாகத் திலிருந்தது.

ஆந்திர நாயக்க மன்னர்களின் நம்பற்குரிய வீரராகவும், நல்லமைச்சராகவும் இலங்கிய தொழுப்பேடு அரியநாயக முதலியாரின் வழிவந்தவர், ஆறை அழகப்ப முதலியார். ஆறை என்பது கோத்திரத்தைக் குறிக்கும் சொல். அழகப்பன் என்பது பெற்றோர்கள் இட்டப் பெயர்.

நெல்லை நகரின் மேலவீதியில் அரண்மனை கட்டி, ஆள், வாள், அத்தாணி மண்டபம் முதலிய ராஜதோரணையில் வாழ்ந்து வந்த இப்பெரியாரை முக்கூடற் பள்ளு போற்றுகின்றது.

சிவநெறியில் சிந்தையினைச் செலுத்தி சிவப்பரம் பொருளை எப்போதும் சித்தத்தில் கொண்டிருந்த இப்பெரியார், தமது நிலங்களை மூன்று வகைப்படுத்தி, அவற்றைப்பிரித்து வைத்தார். மிகச் சிறந்த நஞ்சை நிலங்களைத் திருக்கோயில் களுக்கும், இரண்டாம் தர நிலங்களை அன்னதானத்திற்கும், மூன்றாவது வகை நிலத்தினைத் தமது வாரிசுகளுக்கும் பிரித்துக் கொடுத்த பெருஞ் சிந்தனை கொண்ட வள்ளல். நெல்லைச் சீமையிலுள்ள திருக்கோயில்கள் அனைத்திலும் இன்றும் தளவாய் கட்டளைகள் நடந்து வருவது கண் கூடு. சீவலப்பேரியிலும், சிங்கிகுளத்திலும் சத்திரங்கள் அமைத்தார். அன்னதானக் கட்டளைகள் இன்றும் இங்கு நடந்து வருவதை நாடறியும். தளவாய் குடும்பத்தினருக்குள்ள நிலத்தை நெல்லை நாட்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மக்கள் இன்றும் "எட்டு அடிக்கு ஒரு அடி தளவாய் பூமி" என்று கூறுவர்.

இத்தகைய பெருஞ்சிறப்புக் கொண்ட ஆறை அழகப்ப முதலியாரின் அரண்மனைக்கு, சிவாச்சாரியார் வந்து சேர்ந்தார். அவர் வருவதை முன்னரே அறிந்தவர் போல ஆறை அழகப்ப முதலியார் சிவாச்சாரியாரை உள்ளே அழைத்து விபரம் கேட்க, சிவாச்சாரியார் செப்பறையின் நிலையினை நா தழுதழுக்க எடுத்துக் கூறினார். சிவாச்சாரியாரின் கூற்றுக்களை கேட்டறிந்த அழகப்பர், அவருக்கு வேண்டுவன கொடுத்து அழகிய கூத்தருக்கு ஆலயம் எழுப்பும் சிந்தனையினைக் கொண்டார்.

தக்க அதிகாரிகளை சிவாச்சாரியாரோடு அனுப்பினார். அதிகாரிகளும், தக்க மேட்டு இடம் கோயில் கட்டத் தக்கது என்று எண்ணம் கொண்டனர். பழைய செப்புத் திருமேனிகள் இராசவல்லிபுரத்தில் இருப்பதையும் கண்டு, நெல்லைக்குத் திரும்பி அழகப்பரிடம் முறையிட, அழகப்பர் சிந்தை மகிழ்ந்து ஆலயம் அமைக்க ஆவன செய்திடுக என்று ஆணை பிறப்பித்தார்.

தமிழகம் எங்குமிருந்தும் சிற்பிகள் வரவழைக்கப் பெற்றனர். பொருநைக் கரையின் சிறிது தூரத்தில் மேட்டு நிலத்தில், தமக்குரிய நிலத்திலேயே திருக்கோயில் கட்டப் பெற்றிட ஆணை பிறப்பித்தார் ஆறை அழகப்பர்.

சிற்பிகள், பொருநையால் அழிவுற்ற பழைய திருக் கோயிலின் இடத்தைப் பார்த்து அமைப்பினைக் கண்டறிந்து அதே போன்று ஆலயம் அமைக்க முற்பட்டனர். பழைய திருக்கோயிலில் கிடைத்த பெரும் பெரும் கற்பலகைகளையும், தூண்களையும் கொண்டு வந்து சேர்த்தனர். இரவு பகல் எந்நேரமும், பணியாற்றி அழகியதோர் ஆலயம் அமைத்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

8. திருக்கோயில் அமைப்பு

இந்த ஆலயத்தின் அமைப்பும் அழகும் அற்புதமாக அமைந்துள்ளதை இன்றும் காணலாம்.

கோயிலுக்குச் செல்லும் முகப்பில் காளிகோயில் ஆலயம் உள்ளது. இதனைக் அன்னபூரணி ஆலயம் என்றும் குறிப்பிடு கின்றனர். சிதமபரத்தில் உள்ள தில்லைக் காளி எல்லையில் இருப்பது போல், இந்த அன்னபூரணியான காளியும், செப்பறைத் திருக்கோயிலின் எல்லையில் கொலு வீற்றிருக்கிறாள்.

இந்த அம்மனை வழிபட்டு கோயிலுக்குள் செல்லும் முன்னர் தேர் நிலையத்தைக் காணலாம். இறைவனைத் தேரில் எழுந்தருளச் செய்வதற்கு, தேர் தட்டிற்குச் செல்ல படிக்கட்டுகளும் உள்ளன.

இந்தத் தேர் தட்டினைக் கடந்து கோவிலுக்குச் செல்லும் வழியில் வலது பக்கத்தில் தெப்பக்குளத்தைக் காணலாம். தெப்பக் குளத்தை அடுத்து மிகவும் பழுதடைந்த நிலையில் அன்னதான மண்டபம் ஒன்று உள்ளது. தற்சமயம் அதனைச் சீர்செய்து புதுப்பித்து, "புனிதவதியார் மணிமண்டபம்" எனப் பெயரிடப் பட்டுள்ளது.

அன்னதான மண்டபத்தைக் கடந்து உள்ளே செல்லும் போது, பெருவாயிலின் முகப்பின் அழகிய சிற்பம் ஒன்றைக் காணலாம். சிங்கம் ஒன்றும், யானை ஒன்றும் பொருது நிற்கும் வண்ணம் சிற்பி சிலை வடித்திருக்கிறான்.

முகப்பின் பெருவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் திருவிழா மண்டபத்தை அடையலாம். விரிந்த பரந்த மண்டபம். இந்த மண்டபத்தில் தான், திருவாதிரைத் திருவிழாக்கள் நடைபெறும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாயிலைக் கடந்து திருவிழா மண்டபத்தை அடையும் போது, இடது பக்கமுள்ள ஒரு தூணில் உருத்திராச்ச மாலையும், முடியில் உருத்திராச்ச சிகை மாலையும் கொண்டு நிற்கும் சிவனடியார் ஒருவரின் சிற்பத்தைக் காணலாம். சிவனடியாரின் சிற்பத்தை அடுத்து, தெய்வீகப் பொலிவோடு கைகளைக் கூப்பி தொழுது நிற்கும் மங்கல மடந்தையின் சிற்பத்தைக் காணலாம். இச்சிற்பங்களை கூர்ந்து நோக்கும் போது, ஆலயத்தை அமைத்த சிவனடியாரான ஆறை அழகப்ப முதலியாரும், அவர்களது தேவியுமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

சிதம்பரத்தில் கிழக்குக் கோபுரத்தைக் கட்டிய பச்சயப்ப முதலியார் சிற்பம் அமைந்திருப்பது போல், திருவிழா மண்டபத்தில் ஆறை அழகப்ப முதலியார் சிற்பம் உள்ளது எனக் கொள்ளலாம்.

திருவிழா மண்டபத்தில் உள்ள யாளித் தூண்களில் சூலம், வேல், வியாக்கிரபாதர், பதஞ்சலி, முனிவர்களின் வடிவங்களை சிற்பி வடித்து வைத்திருக்கிறான். விழா மண்டபத்தின் மேடை அருகில், இடது புறத்தூண்களில் முருகன் சிற்பம் அமைக்கப் பட்டுள்ளது.

திருவிழா மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த மண்டபத்தில் நடன நங்கையரின் சிற்பங்களும் வடிக்கப் பெற்றுள்ளன.

திருவிழா மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால், வியப்பான கல் மண்டபம் ஒன்று கவினோடு காட்சியளிக்கும். மேல்கூரை தட்டுப்பந்தல் அமைப்பில் இல்லை. தற்காலத்திய அமைப்பினைப் போல் மேல்நோக்கி, சற்று உயரத்தில் வெளிச்சம் உள்ளே வருவதற்கேற்ப கல்லால் அழகிய மேடு அமைத்திருக்கிறார்கள்.

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தூக்கிய மோடு கூரையைத் தாங்க "கல்"லிலேயே சட்ட வளை (விட்டம்) உருவாக்கி, இடைவெளிவிட்டு, கல் சட்டங்களுக்கு இடையே, கற்களாலேயே, விட்டங்களை கோர்த் திருக்கிறார்கள். இந்த விட்டங்களை மல்லு என்ற கற்களாலாகிய சட்டங்கள் இணைக்கின்றது. ஏறத்தாழ 45 அடி நீளத்திற்கு இந்தக்கற்களாலான சட்ட ஆங்கிள் அமைப்பு கூரை மீது அமர்ந்திருக்கிறது. இத்திருக்கோயில் பள்ளியறைக் கட்டடமும், சப்பரமும் 3.5.1920-ல் திருநெல்வேலி டவுண் வடக்கு ரதவீதி வடக்கரண்மனை அ.ந.பிள்ளைக்கண்ணு பிள்ளை அவரது மனைவி சொர்ணத்தம்மாள் அவர்களால் செய்துவிக்கப்பட்டது.

வேலைப்பாடு அமைந்த இந்த அழகிய மண்டபம் முடிவில் அருமையான கல் மண்டபம். மண்டபத்தில் சபையில் 12 கல் தூண்கள். இந்த மண்டபத்தை அடுத்துக் கருவறையில், அழகிய கூத்தர் ஆடிக் கொண்டிருக்கும் அற்புதமான காட்சி.

நான்கு திருக்கரங்கள். மூன்று கண்கள். விரிந்து வீசித் திகழும் ஜடா முடிகள். ஜடா முடியின் உச்சியில் கொக்கிறகு மலரைச் சூடி நிற்கும் திருமுடிகள். சடா முடியில் அர்த்த சந்திரன் நாகங்கள். கங்கை தேவி, இடது பாகம் அம்மையின் பாகமாதலால் இடது காதில் தோடு, வலது காதில் குண்டலம். சர்வ ஆபரணங்கள் அலங்கரிக்கும் மார்பு. அழகிய பூணூல். புலித்தோல் ஆடை. பாதத்தில் கிங்கிணி கொஞ்சும் அழகு, இடது கை திருவடியை நோக்கி, தூக்கிய கால் கணைகளின் அருகில், பட்டும் படாமலும் சிறிது இடைவெளியில் தோன்றும் சிறப்பு. வலது கை அபயமளிக்கும் கரம், உடுக்கை, அக்னி, பிறகைகளில் தூக்கிய திருவடி. ஆடல் முறையில் செறிவோடு விளங்கும் சீர்த்தி, முயலகன் மீது ஊன்றிய சிறிது வளைந்த அருட்பாதமும், காலின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அழகு, நித்தம் நித்தம் போற்றி வணங்கிடும் பொற்பு, அர்ச்சனை மந்திரங்களால் அர்ச்சித்து பூக்கள் பொலியும் பொற்புடன் காட்சி தருகிறார். ஆடல்வல்லான் என்ற அழகிய கூத்தப் பெருமாள்.

இந்த அழகிய வடிவத்தை அழகிய கூத்தரை அர்ச்சித்தும், ஆராதனை செய்தும் வரும் சிவஸ்ரீ ஸ்ரீ கணேச சிவாச்சாரியார், நெஞ்சும் உருக, நெகிழ்ந்து கூறினார். அது

சதுர்புஜம் த்ரீநேத்ரம்ஜா
சுவி கீர்ண ஜடாதரம் குரரி
பட்ச சம்யுக்தம் பஹ பிஞ்ச
சமன்பிதம் மலன தட்சேரு
துத்தூரம் அர்த்த சந்திர சமன்பிதம்
தட்சிணேது ஜடா கிரே ஜா
ஜான் ஹவ்விய ஜபி வந்திதம்
பத்ரம் தூ வாம கர்ணேசியாது
தட்சிணே மகர குண்டலம்
சர்வாபரண சம்யுக்தம்
உபவீத சமன்விதம்
வியாக்கிர ஜினேம் பரோரேபதம்
பாத கிங்கிணி ஸோபிதம்
கிரேப்பிராசிதம் வாமே
தட்சிண அபய ஹஸ்தேது
வந்நிஹிம் வாமன ஹஸ்தகே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta





Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ காந்திமதி அம்பாள்

ஸ்ரீ நெல்லையப்பர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வக்கிரம் தூத்டசிண பாதம்

அபத் மரோ பரித்திதம்

உத்திரிதம் வாம பாதம்தூ

பாதந்தம் தட்சிணானுகம்

ஏவம் த்யாகுவாஅட்சேயம்

நித்யம் நிர்த்தராஜம் ஹ ஷேஷ சதகா

என்பதாம். இந்த மந்திரத்தை பெரியவர் R.M. கணேச சிவாச்சாரியார் கூறும் போது தன்னை மறந்தார். தலைப்பட்டார். தலைவன் தாளினையே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லை நடராஜ பெருமானை ஒன்றியிருந்து உள்கி, அந்த அழகுக் கோலத்தைக் கண்ணாரக் கண்டு கசிந்தார்.

சேக்கிழார்,

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக்குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்விக மேஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் என்று

இந்த ஆனந்தக் கூத்தினை அழகோவியமாகத் தீட்டுகிறார். குனிந்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்
வெண்ணீறு

இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

என்று பாடுகின்றார் அப்பர் பெருமான்.

கொடி மரத்திற்குக் கிழக்கே விழா மண்டபம். இதன் மேற்கு வடக்கு திருச்சுற்றில் கல் நடராஜர், சிவகாமிஅம்மை, கிழக்கு சுற்றில் வயிரவர், தெற்கே அதிகார நந்தி, சூரியன், தென்கிழக்கே மடப்பள்ளி, அருகில் அருமையான கிணறு, தெற்குச் சுற்றில் சுரதேவர், கன்னி விநாயகர், ஐயனார், சப்தமாதர் திருமேனிகள் திகழ்வதைக் காணலாம்.

கருவறையை ஒட்டி தட்சிணாமூர்த்தி, வடக்குப் பக்கம் சண்டிகேஸ்வரர், வில்வமரம் ஆகிய உள்ளன.

சிவகாமி அம்மை உடனுறைஅழகிய கூத்தரை கண்ணார கண்டு களித்து நெல்லையப்பர் சந்நிதிக்கு வரவேண்டும்.

கிழக்கு வாயிலுக்கு நேர் எதிராக நெல்லையப்பர். இலிங்க திருமேனியோடு விளங்குகிறார். நெல்லையப்பர் திருமுன்ன கொடிமரம் பலிபீடம் நந்தியம் பெருமான், முழுதுக் கண்ட ரா பாண்டிய மன்னனால் வழிபடப் பெற்ற நெல்லையப்ப வணங்கி, வர வேண்டும்.

ஒயிலாக அருள்பொழியும் கண்களோடு காட்சி தரு காந்திமதியின் கண்களை உற்று நோக்கினால், அருள்பொழியு பாங்கைக் காணலாம்.

காந்திமதி அம்மையினை வணங்கி பிரகாரம் சுற்றிவரு போது, உற்சவ மூர்த்திகளை வணங்கலாம். இந்த உற்ச

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta
மூர்த்திகளை வணங்கி வரும் போது, கல் மண்டபங்களின் அழகினையும் பெரும் பெரும் கற் பலகைகளால் கட்டப் பட்டிருக்கும் நேர்த்தியினையும் கண்டு மகிழலாம்.

வில்வ மரத்தையும், சந்திர சூரியர்களை இத்திருக் கோயிலில் கண்டு வணங்கி இன்புறலாம்.

அர்த்த மண்டபத்தில் பள்ளியறைச் சொக்கர் உள்ளார். மகா மண்டபத்தின் தென்பகுதியில் சந்திரசேகரர் அத்திரதேவர், சீபலி நாதர், விநாயகர், முருகன் ஆகியோர் திருமேனிகள் உள்ளன. மண்டபத்தின் வடக்குப் பகுதியில் பதஞ்சலி, வியாக்கிரபாதர் திருமேனிகள் உள்ளன.

அழகிய கூத்தரையும் நெல்லையப்பரையும் காந்திமதி அன்னையையும் வழிபட்டு வந்து, உற்சவ மூர்த்திகளையும் வணங்கி கல்நடராஜர், முருகனையும் வணங்கி கொடி மரத்தையும், நந்தியெம் பெருமானையும் வழிபட்டு, பலிபீடத்தின் அருகில் அமர்ந்து, நமது ஆணவங்களைப் பலியிட்டு, விழுந்து வணங்கிச் சிறிது அமர்ந்து பெருமானே தங்களைக் கண்டும் வணங்கியும் வரும் பேற்றினைப் பெற்றேன் என்று இயம்பி "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்றும், "வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவாய் நீ" என்றும் விழுந்து வணங்கி வந்திட வேண்டும்.

மங்கையொரு பாகனாகிய அழகிய கூத்தரை வழிபட்டு வந்தோம். வாழ்வில் இனி மகிழ்ச்சியே பொங்கும் என்ற மனநிறைவோடு வந்திட வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

9. தொன்மைச் சுவடுகள்

பழைய செப்பறை திருக்கோயில் பொருநையாற்றின் வட பகுதியில் இருந்திருக்கிறது. மிகப் பெரிய நிலப்பரப்பில் திகழ்ந்த இக்கோயில் ஆற்று வெள்ளத்தால் அழிந்து விட்டது. அழிந்த ஆலயத்தின் சுவடுகளை இன்றும் இங்கு காணலாம். ஆங்காங்கே சிதறிக் கிடக்கும், பெரும் பெரும் தூண்களும், சுண்ணாம்புக் காரைகளும், பழையக் கோயிலின் சான்றுகளாக ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன.

ஆற்றின் கரையில் காணப்பெறும் கட்டிடங்களின் இடிபாடுகளும், கோட்டை கொத்தளங்களின் அழிவுகளும், இதன் பழமைக்குச் சான்றாக உள்ளன.

இந்த இடத்தில் பொருநை மிகுந்த ஆழமுள்ளதாக இருக்கிறது என்பதை, அரசு அறிவித்துள்ளது. இங்கு ஓடிக் கொண்டிருக்கும் பொருநையின் எதிர் கரையில் சிறிய குன்று ஒன்று உள்ளது. இதனை வெள்ளிமலை என்று கூறுகிறார்கள். பாண்டிய மன்னன் கட்டிய பழைய திருக்கோயில் ஆற்று வெள்ளத்தாலும், சூறாவளிக் காற்றாலும் அழிந்த போது, திருக்கோயிலில் இருந்த வெள்ளித்தேரும், தெய்வத் திருமேனிகளும், இம்மலையிலிருந்த கயத்தில் (கஜம்) மூழ்கி விட்டன. எனவே இம்மலையும் வெள்ளிமலை என்று பெயரைப் பெற்றது என்கிறார் R.M. கணேச சிவாச்சாரியார்.

மூழ்கிவிட்ட, தேரையும், திருமேனிகளையும் எடுக்க இயலாமல் ஊர்மக்கள் தவித்த போது, அந்நாளில் பூசனை புரிந்த சிவாச்சாரியார் கனவில் இறைவன் தோன்றி, தெய்வத் திருமேனிகள் மட்டுமே கிடைக்கும் என்று கூறி, கயத்தின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கரையில் ஒதுங்கிட, அவற்றை எடுத்து இப்போதுள்ள ஆலயத்தில் எழுந்தருளச் செய்தார்கள் என்று, அவ்வூர் செ. முருகன் பிள்ளை அவர்கள் கூறினார்கள்.

பழைய ஆலயம் இருந்த இடத்தில் இன்று மக்கள் விநாயகரை எழுந்தருளச் செய்திருக்கிறார்கள்.

ஆற்றங்கரையில் ஒரு கல் மண்டபம் காணப் பெறுகின்றது. இம்மண்டபம் ஆன்மார்த்த சிவபூசையினை உடையவர்கள் நித்திய சிவபூசை செய்யும் சிவபூசை மண்டபமாகும்.

இப்போதுள்ள ஆலயத்திற்கு எதிர்புறம் இடிந்த மண்டபம் ஒன்று காணப்பெறுகின்றது. இதனைக் குருக்கள் ஐயா மண்டபம் என்று மக்கள் கூறுகின்றனர். இம்மண்டபத்திலிருந்து குருக்கள் ஐயா மாணவர்களுக்கு சைவ சித்தாந்த நெறிகளையும், வடமொழி தென்மொழித் தத்துவங்களையும் போதித்து வந்தார் என்று கூறுகின்றனர்.

பழமையும், தெய்வீகமும் இணைந்து இலங்கும் செப்பறைத் திருக்கோயிலில் சிறியகோபுரமும் உள்ளது.

கோயிலின் கூரையில் முகப்பில் ஒரு பெரிய மணி உள்ளது. இந்த மிகப்பெரும் மணியைச் சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 1960-ஆம் ஆண்டு வழங்கி உள்ளார்கள். செப்பறையின் மீதும் செப்பறை குருக்கள் மீதும் சேதுப்பிள்ளை அவர்களக்கு எல்லையற்ற ஈடுபாடு உண்டு. செப்பறை குருக்களிடம் அவர்கள் திருக்குறள், திருமுறைகள் ஆகியவற்றை இளமையிலேயே பாடம் கேட்டார்கள் என்று கூறுவார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

10. ஆறை அழகப்ப முதலியாரின் திருப்பணியும், பக்தி நெறியும்

அரியதோர் ஆலயத்தை அமைத்த ஆறை அழகப்ப முதலியார், விழாக்கள் நடைபெறவும், நாள்வழிபாடுகள் நல்ல முறையில் அமைவதற்கும், தோப்புக்களையும் நன்செய் நிலங்களையும் நிபந்தமாக எழுதி வைத்துள்ளார்கள். அவற்றிலிருந்து வரும் வருவாயினைக் கொண்டு, விழாக்களும், நாள் வழிபாடுகளும் நடந்து வருகின்றன.

சித்திரைத் திருவோணம், ஆனி உத்திரம் திருமஞ்சனம் ஆவணி வளர்பிறை சதுர்த்தசி திருவிழா, புரட்டாசி வளர்பிறை சதுர்த்தசி நவராத்திரி விழா, கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, மாசி வளர்பிறை சதுர்த்தசி, ஆகிய திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஆனி உத்திர திருநாள் மார்கழி திருவாதிரை திருநாள் நவராத்திரி திருவிழா மேடை தளவாய் கட்டளை மூலம் நடைபெறுகிறது.

வருடத்தின் 12 மாதங்களில் வரும் திருவாதிரை நட்சத்திர நாட்களில் பகல் 11 மணியளவில் ஸ்ரீ ஆனந்தக் கூத்தருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

சைவ நெறியில் மிகுந்த ஈடுபாடும் செப்பறை அழகிய கூத்தர் மீது எல்லையற்ற பக்தியும் கொண்ட ஆறை அழகப்ப முதலியார், நாள்தோறும், தமது மாளிகையில் பூஜை வழிபாடுகள் முடித்து, செப்பறை மணியை எதிர்ப்பார்த்து இருப்பார்களாம். செப்பறை திருக்கோயிலில் காலை சந்தி முடிந்ததும், ஒரு பெருமணி முழங்குமாம். அந்த மணியோசையைக் கேட்டு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அரைக்கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பிறிதொரு மணி முழங்குமாம். அந்த மணியோசை அரைக்கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் பிறிதொரு மணியை முழங்கச் செய்யுமாம். இவ்வாறு, செப்பறையிலிருந்து தளவாய் அரண்மனை வரையுள்ள மணி முழங்கிட, இந்த மணியோசையைக் கேட்ட பின்னரே அழகப்பர் காலை உணவை எடுத்துக் கொள்வாராம்.

தெய்வப் பற்றையும், செப்பறையின் மீது எல்லையற்ற பக்தியும் கொண்ட ஆறை அழகப்ப முதலியாரின் வாரிசான தளவாய் தீ. இராமசாமி அவர்கள் இச்செய்திகளைக் கூறும் போது அடக்கத்தையே கொள்கலனாகக் கொண்டு கூறினார். DTR என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் தளவாய் T. இராமஸ்வாமி அவர்கள் தங்களின் முன்னோர்கள் போல் தமிழ் இலக்கியத்தின் மீதும் சைவ நெறியின் மீதும் எல்லையற்ற ஈடுபாடு கொண்டுள்ளார். இரசிகமணி TKC அவர்கள் ஏற்படுத்திய வட்டத்தொட்டியை தற்போது பொருநை இலக்கியம் என்று ஏற்படுத்தி அதற்கு புரவலராகப் பொலியும் DTR அவர்கள் செப்பறை அழகிய கூத்தர் திருக்கோயில் பக்தர்கள் சங்கத்தின் கௌரவத் தலைவராகவும் திகழ்கிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

11. திருவிழாக்களும், நித்திய பூஜைகளும்

செப்பறை அழகிய கூத்தர் திருக்கோயிலில் ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றன.

ஆடல் வல்லானுக்குரிய ஆறு திருமஞ்சன நாட்களும் சிறப்பாக நியமமுடன் நிகழ்ந்து வருகிறது. காலச்சூழ்நிலைக் கருதி தற்சமயம் திருவிழா அல்லாத நாட்களில் காலை மணி 6 முதல் 9 வரையும் மாலை மணி 5 முதல் 7 வரையும் நடைதிறக்கப் பட்டிருக்கிறது.

சித்திரை மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் ஆயிரத்தெட்டு சங்காபிசேக விழா சிறப்புடையது. இந்தச் சங்குகள் காட்டாம் புளி சுப்பிரமணிய பிள்ளை குடும்பத்தின் உபயமாகும். இத்திருக்கோயிலில் வலம்புரி சங்கும் உள்ளது. அகத்தியருக்கும் மணவை மன்னனுக்கும் ஆடல்காட்சி அருளிய ஆனி உத்திரம் திருவிழா பத்து நாட்கள் நிகழுகிறது. 9-ம் திருநாள் திருத்தேர் பவனி 50 வருடமாக ஓடாதிருந்த தேர் 24.1.2007 தை மாதம் 10-ம் தேதி மதியம் 1.30 மணிக்கு மேல் மீண்டும் ஓடத் தொடங்குகிறது.

பங்குனி திருவாதிரைச் சிறப்பு நிகழ்ச்சியாக அக்னிபகவான் ராஜவல்லிபுரம் திருக்கோயிலுக்கு முதல்நாள் எழுந்தருளி சிவபூஜை செய்து மறுநாள் காலை 11 மணிக்கு காட்சிக்காகச் செப்பறை வருகிறார். (அக்னி நடனக் கட்டளை) இத்திருக்கோயிலில் இந்த திருவிழாவை அக்னிதேவன் திருநடனத்தை தரிசித்ததை மையமாக வைத்து நடத்தப்படு கிறது. தை அமாவாசை அன்று திருமாலுக்கு அழகிய கூத்தர் நடன காட்சி நடைபெறுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சித்திரை தீர்த்தவாரி, சித்திரை ஓணத்தில் ஆயிரத்தெட்டு, சங்காபிசேகம், (சங்கு திருமுழுக்கும்) ஆவணி புரட்டாசி, மாசி சதுர்த்தியில் அபிசேகமும் (திருமுழுக்கும்) நடைபெறுகின்றன. பங்குனித் திருவாதிரையில் அக்னி தேவனுக்கு நடனங் காட்டிய காட்சியும், தை அமாவாசையன்று திருமாலுக்கு ஆடல் காட்டிய வரலாறும் காண்போர் கருத்தைக் கவரச் செய்வன. மாதந்தோறும் திருவாதிரை நட்சத்திரத்தில் சிறப்பு அபிசேகம் தீபாராதனை நிகழுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

12. கண்கொள்ளாக் காட்சி

ஆனித் திருமஞ்சனமும், மார்கழித் திருவாதிரைத் திருவிழாவும் செப்பறை அழகிய கூத்தர் கோயிலில் வெகு சிறப்பாக நிகழும். ஆடல் வல்லானின் திருமுன்னர், சங்கு சின்னம், கொம்பு வாத்யம், மத்தளம் இன்னும் பல வாத்தியங்கள் இன்னிசை முழங்க, ஆனந்த பைரவியில் நாதஸ்வரம் இசைத்திட சிவாச்சாரியார் அலங்காரத் தீபம் ஏந்தி முன்பும், பின்பும், மேலும், கீழும், பக்கவாட்டிலும் சுடர்விட்ட தீபம், கணேச சிவாச்சாரியர் கைவண்ணத்தால் மக்கள் அனைவரும் தக்கத்தரிகிடதக்கத் தரிகிட என்று நடன தாளம் போட நிகழும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" என்பதற்கேற்ப, துவண்டு தொழுது ஆடிப்பாடும் அன்பர்களின் ஆனந்த நிலையினை திருவாதிரைத் திருநாளில் செப்பறையில் காணலாம். ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் இலங்கும் இறைவனைக் கண்ணாரக் கண்டு கைதொழுது கசிந்து நிற்பர்.

மார்கழி திருவாதிரை அன்று அபிசேகம் இரவு 2 மணிக்கு தொடங்கி சிறப்பு பூஜையும் கோபூஜையும் முற்பகல் நடனமும் இரவு வீதிவுலாவும் அன்றிரவே சிறப்பு அபிசேகமும் முடிந்து நடனம் ஆடி சபைக்கு எழுந்தருள்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

சிவாச்சாரியாரின் கைவண்ணமும், செப்பறை அழகிய கூத்தரின் நடனமும் இணைந்து திகழும் அந்த அற்புதக் காட்சியினைக் காணக் கண்கோடி வேண்டும். பாடிட பல்லாயிரம் நாவுகள் வேண்டும். எழுதிட எண்ணற்ற கைகள் வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோபூஜை நிகழ்ச்சியும், இங்கு அற்புதமாக நிகழும், கோ பூஜைக்கு உரிய பசுவும், கன்றும், முன்பும் பின்பும் திருப்பிக் காட்டி பூசையை ஏற்றுக் கொள்வது அற்புதத்திலும் அற்புதம்.

திருவாதிரை நாளில் திருவெம்பாவை பாடிய மணிவாசகப் பெருமானின் திருவீதி உலா திருக்கோயில் திருச்சுற்று வழியில் ஊர் வலமாக வரும். பத்து நாளும் ஊர்வலம் வரும். ஸ்ரீ அழகிய கூத்தர் சந்நிதியின் முன்னர் திருவெம்பாவை ஓதப்படும்.

மார்கழித் திருவாதிரை நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவதில் முக்கிய பொறுப்பு வகிப்பவர் சிவபூசை சொ. சுந்தரம் பிள்ளை. தூய வெண்ணீறு துதைந்த திருமேனியைக் கொண்ட சொ. சுந்தரம்பிள்ளை, உற்றாரையான் வேண்டேன் ஊர் வேண்டேன், பேர் வேண்டேன் கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும், செப்பறையில் உறையும் கூத்தா உன் குரை கழலையே வேண்டுவனே என்ற கொள்கையுடையவர். ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கி, கூடும் அன்பினில் கும்பிடும் கோதிலா சிவபூசைச் செல்வர். தெண்ணிலா மலரும் வேணியரின் திருநடனத்தைக் கும்பிடவே மண்ணில் பிறந்த பயன் என்று வாழும் பண்புடன் திகழ்பவர் திருநாவுக்கரசராக வாழும் சொ. சுந்தரம்பிள்ளை அவர்கள். எல்லோரையும் நெறிப்படுத்தி விடுபவர்கள். நல்ல முன்னோடியும் வழிகாட்டியுமாவார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

13. கல்வெட்டுச் செய்திகள்

ஏறத்தாழ முன்னூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் உருவாகிய அழகியகூத்தர் ஆலயத்தில் வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

மண்டபங்களின் மேல் தட்டில் மீன் சின்னங்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. இந்த நீண்ட கற்பலகைகள், பழங்காலத்துக் கோயிலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம்.

கொல்லம் ஆண்டு 896-ல் கார்த்திகை மாதம் 12ஆம் நாள் பொருநையில் பெரு வெள்ளம் பொங்கி எழுந்து ஆலயத்தை அழித்தது. 1726-ஆம் ஆண்டு புதிய கோயில் கட்டப் பெற்றுக் குடமுழுக்கும் நடந்தது. இக்கல்வெட்டில் ஆறை அழகப்ப முதலியார் சதா சேவை நீடுழி வாழ்க என்ற குறிப்பு உள்ளது. பிறிதொரு கல்வெட்டு தீத்தியப்பன் சதா சேவை என்று குறிப்பிடுகிறது.

செப்பறை மகாசபைக்குச் செப்பு ஓடுவேய்ந்ததை பிற்காலக் கல்வெட்டு ஒன்று கீழ்க்கண்டவண்ணம் குறிப்பிடுகிறது.

துன்மதி வைகாசி அஸ்தத்தில் செப்பறை மகாசபைக்கு செப்பு ஓடு வேய்ந்து, நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் ஆகம யுக்தி பிரகாரம் இனிது நிறைவேற்றப் பெற்றன. ஸ்ரீ சுந்தர தாண்டவர் திருவடி வாழ்க. சிவகாம நெறி ஓங்க. சித்தாந்த சைவம் வெல்க.

செப்பறை மடாதிபதி அழகிய கூத்தர் தேசிகர் 18.5.1921

செப்பறை ஸ்ரீ அழகியகூத்தர் திருக்கோயிலில் அமைந்துள்ள சபா மண்டபம் குளத்தூர் ஜமீன்தார் குடும்பத்தினரால் கட்டப்பெற்றது. இதைக் குறிக்கும் கல்வெட்டு சபா மண்டபத்தின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
பின்பகுதியில் "குளத்தூர் இருபாகம் ஜமீன்தார் தில்லை தாண்டவராயப் பிள்ளை உபயம் ரூபாய் ஆயிரம் என்றுள்ளது."

இக்கோயிலில் மற்றொரு கல்வெட்டு "இந்தப் பள்ளியறைக் கட்டடமும், சப்பரமும் திருநெல்வேலி வடக்கு ரதவீதி வடக்கரண் மனை அ.ந. பிள்ளைக் கண்ணு பிள்ளையவர்கள் ஸ்திரி சொர்ணத்தம்மாள் என்ற மகமாயி அம்மாளால் செய்துவிக்கப் பட்டது. 03.05.1920 இக்கல்வெட்டு பள்ளியறைச் சுவரில் உள்ளது."

சிவாச்சாரியார்களின் சிறந்த சேவை

செப்பறை சிவாச்சாரியார்கள் செய்து வரும் சிவத்தொண்டு சிறந்த தொண்டாகும். ஆர்.எம். கணேசசிவாச்சாரியார் அருள்பொலிந்த சிவாச்சாரியாரின் பரம்பரையில் வந்தவர். சிவநெறி போற்றி வாழும் ஆர்.எம். கணேச சிவாச்சாரியார் முதிர்ந்த வயதிலும் பன் முக தீபங்களைத் தூக்கித் திருவாதிரை நாளில் அழகிய கூத்தர் சந்நிதியில், ஆடல் முறையினை அபிநயம் பிடித்து பல்முகத் தீபத்தோடு தானும் ஆடி, அடியார்களையும் ஆட வைத்துப் பக்தியில் ஈடுபடுத்தி வருகிறார்.

இங்குள்ள சிவாச்சாரியர்களான சிவ ஸ்ரீ. கைலாச பட்டர், சிவ ஸ்ரீ விஸ்வநாத பட்டர், சிவ ஸ்ரீ சு. முத்துக்குமார பட்டர் ஆகியோர் அழகிய கூத்தர் எங்களுக்குத் தேவையானவற்றினைத் தருகிறார். குறை ஒன்றும் இல்லை என்று மனநிறைவோடு கூறி பரார்த்த பூசையினை முறையாகச் செய்து வருவது மகிழ்ச்சியைத் தருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

14. வழிபட்டோர் பெற்ற பயன்

அழகிய கூத்தர் தம்மை நாடி வரும் அடியார்களின் அகத்தை அறிந்து அவர்கள் வேண்டுவனவற்றை வாரி வழங்குகிறார். இலுமிச்சம்பழம், புட்டமுது, பழம் ஆகியவற்றை அப்பெருமானுக்குப் படைத்து மக்கள் வழிபட்டு வருகின்றனர். சிலர் தங்கத்தாலான இலுமிச்சம் பழத்தை கூத்தப் பெருமானுக்குப் படைத்தும் வழிபடுகின்றனர். பலர் இலுமிச்சம் பழம் மாலை சார்த்தி வழிபடுகின்றனர்.

நவகோள்களின் பார்வையால் குழந்தைகள் துன்புற்றால், பெற்றோர்கள், குழந்தைகளைக் கொண்டு வந்து கூத்தர் திருவடியில் ஒப்படைக்கின்றனர். சிவாச்சாரியார் குழந்தைகளை ஏலம் போடுகிறார். பெற்றோர்கள் 101, 51 ரூபாய் கொடுத்து ஏலம் எடுத்துக் குழந்தைகளைக் கொண்டு செல்கின்றனர். நாளும் கோளும் சரியில்லாத பெரியவர்களையும் கூத்தரிடம் ஒப்படைத்து ஏலம் எடுக்கலாம் என்றார் அன்பர் பணி செய்து வரும் முருகன் பிள்ளை.

கூத்தப் பெருமானுக்கு வேண்டுதல் செய்து அணிகலன்கள் பலர் வழங்கியுள்ளனர்.

கூத்தப் பெருமான் மார்பில் ஒளி மிகுந்த காசுமாலை கவினோடு காட்சியளித்துக் கண்டாரைக் கவரும்.

இராசவல்லிபுரத்தைச் சேர்ந்த ஆர்.வி. கனகசபாபதி பிள்ளை என்னும் பெரியார் ஐம்பத்தொரு பொற்காசு கொண்ட பொன் காசுமாலையைக் கூத்தப் பெருமானுக்குச் சார்த்தினார். கூத்தப் பெருமான் பிள்ளையவர்களின் மனைவியார் கனவில் சென்று பாக்கி ஐம்பது காசு எங்கே என்று கேட்க, உடனே அவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இன்னும் ஐம்பது காசுகளை வழங்கி 101 பொற்காசுகள் கொண்ட பொன்மாலையை வழங்கினார். கூத்தப் பெருமான் மார்பில் இந்தப் பொற்காசு மாலை இன்றும் பொற்போடு திகழ்கிறது. இந்தப் பொற்காசு மாலைகளை வழங்கிய சிவனடியார் வழியில் வந்தவரே சிவபூசை சொ. சுந்தரம்பிள்ளை அவர்கள். முற்றிய நெற்றாகக் காட்சி தரும் சிவபூசை சுந்தரம் பிள்ளை திருமுறைப் பதிகங்களை கணீரென்று வெங்கலக் குரலில் பாடுவார்கள். இத்தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிது.

டாக்டர் அம்பலவாணப்பிள்ளை என்ற அன்பர் கடற்படையில் டாக்டராகப் பணியாற்றியவர். அவர் பணியாற்றிய கப்பற் படைக் கப்பல் ஒருமுறை புயலில் சிக்கிக் கொண்டது. கப்பல் கவிழும் நிலைக்கு வந்துவிட்டது. அனைவரும் அஞ்சி நடுங்கினர். ஆனால் டாக்டர் மட்டும் அழகிய கூத்தரை நினைத்து தியானித்து உருகி வேண்டினார். வேண்டியவர்க்கு வேண்டியதை ஈந்து மகிழும் அழகிய கூத்தர் அருளால் புயல் ஓய்ந்தது. கப்பலும் பிழைத்தது. பயணிகள் அனைவரும் உயிர்தப்பினர். கூத்தப் பெருமான் அருளால் பிழைத்த அம்பலவாணப் பிள்ளை கூத்தப் பெருமானுக்கு கண்ணைக் கவரும் பதக்கம் செய்து சார்த்தினார். அந்தப் பதக்கம் இன்றும் அழகிய கூத்தர் மார்பில் பொலிந்து கிடக்கிறது.

எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் வாழ்ந்த ஊர் இதுவே. டாக்டர் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளைக்கு, 1959-ஆம் ஆண்டு சிறிது உடல்நலம் பாதித்தது. நீரிழிவு நோய் கொஞ்சம் கடுமையாகியது. நோயின் கடுமையினைக் குறைத்திட, அழகிய கூத்தரை டாக்டர் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்களும் அவர்களது துணைவியாரும் வேண்டினார்கள். நீரிழிவு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நோயின் கடுமையும் குறைந்தது. வேண்டுதல் வெற்றி பெற்றமையால், செப்பறை திருக்கோயிலுக்கு மிகப்பெரிய மணி வாங்கி வழங்கினார்கள்.

சித்திரை திருவோணத் திருநாளில் ஆயிரத்தெட்டுச் சங்கு திருமுழுக்கும் சிறப்பாக நடைபெறுவதற்கு இராஜவல்லிபுரம் காட்டாம்புளி சுப்பிரமணிய பிள்ளை குடும்பத்தினர் ஆயிரத்தெட்டு சங்குகள் வாங்கி வழங்கி இருக்கின்றனர்.

அகஸ்தியர் அமர்ந்த பொதிகை மலையில் உற்பத்தியாகி வரும் பொருநை நதியே தீர்த்தமாகும். ஆற்றின் கரையோரம் தைப்பூச மண்டபம் இருந்தது. அது சிதிலமடைந்து விட்டதால் மேல்புறம் புதிய மண்டபம் தற்போது கட்டப்பட்டுள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கல்லில் உருவாக்கிய
அருள்மிகு நடராஜர், சிவகாமி அம்மை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தட்சிணாமூர்த்தி சன்னதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

15. இலக்கியச் சிறப்பு

வேண்டுவோருக்கு வேண்டியதை ஈந்து உவக்கும் கூத்தப் பெருமானையும், அவர் எழுந்தருளியிருக்கும் செப்பறையினையும் பல்வேறு அருளாளர்களும், புலவர்களும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

செப்பறை தலபுராணம், செப்பறை கனசபை உலா, செப்பறை உலா போன்ற நூல்கள் உள்ளன. செப்பறை உலா செப்பறை மடத்தின் தலைவராயிருந்த கனகசபாதி குருக்களால் பாடப்பெற்றது.

அக்கினி தேவர் துதி செய்த அழகிய கூத்தர் தோத்திர அஷ்டகம் உள்ளது. இதன் தமிழ்மொழி பெயர்ப்பும் உள்ளது.

கனகசபை நாதன் உலா என்ற ஒரு நூலை அக்காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர் ஒருவர் பாடியுள்ளார். செப்பறை அந்தாதி என்ற ஒரு நூலும் உள்ளது.

<u>செப்பறை பற்றிய நூல்கள்</u>

செப்பறை மான்மியம்

செப்பறை வரலாறு

செப்பறை உலா

செப்பறை கனகசபைநாதன் உலா

செப்பறை அந்தாதி

சீவலமாறன் கதை (விஜயநாராயணம் சிதம்பரசுவாமி இயற்றியது)

முக்கூடற்பள்ளு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் பொலியும் செப்பறை அழகிய கூத்தர் ஆலயத்திற்கு 18.5.1921- வைகாசியில் அஸ்த நட்சத்திரத்திலும், 09.06.1978 வைகாசி புனர்பூச நட்சத்திரத்திலும் குடமுழுக்குப் பெருவிழா நடந்தது.

பின்னர் (24.1.2007) 1182ம் ஆண்டு விய வரும் தை மாதம் 10-ம் தேதி புதன்கிழமை காலை மணி 9.30க்கு மேல் 10.30க்குள் மீன லக்கனத்தில் திருக்குடமுழுக்குப் பெருவிழா நடைபெற்றது.

குடமுழுக்குப் பெருவிழாவினை முன்னிட்டு இருபது லட்சம் செலவில் பல்வேறு திருப்பணிகள் நடந்துள்ளன.

திருப்பணிக்குழுத் தலைவராகத் திருநெறியினைப் போற்றும் திருவுடைச் செம்மல் சிவபூசை க. திருஞான சம்பந்தம் திகழ்கிறார். சிவத் தொண்டையே தவத் தொண்டாகக் கருதி நாளும் பொழுதும் மங்கலமாம் சைவத்தினைப் பேணி வரும் தவசீலர். பன்னிரு திருமுறைகளில் பழுத்த ஞானமும், பழகுவதற்கு எளிமையும் இனிமையும் கொண்டுள்ள சிவனடியார் இவர். சித்தத்தில் எப்போதும் சிவனையே சிந்தித்து வாழும் இயல்புடையவர், இந்தத் திருத்தொண்டர். இத்திருத்தொண்டர் தலைமையில் திரு. சு. கசன் காத்த பெருமாள் அவர்கள் செயலாளர் & பொருளாளராக (தக்கார்) வைத்து நல்ல நிர்வாக உறுப்பினர்களையும் கொண்டு திருப்பணிகள் செய்துள்ளனர். நாகர்கோவில் திரு.வி. எஸ். மகாதேவ ஐயர், ஆலங்குடி கோவில் மானேஜர். திரு. சண்முக திரவியம் ஆகியோர்கள் ஆற்றிய கும்பாபிசேகப் பணிகள் மிகவும் போற்றுதற்குரியது.

செப்பறை மடம் சிறப்புடைய மடமாகும். இம்மடத்தின் 14-வது பட்டம் அழகிய கூத்தர் தேசிகன் காலம் பொன்னால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொறிக்கப்பட வேண்டிய காலம். அவர்களால் அமைக்கப்பட்ட முறைப்படி ஐந்து பேர் கொண்ட குழு இம்மடத்தை நடத்தி வருகின்றனர். பழைய திருக்கோயிலுக்கு அருகே 12 (சமாதி) மூர்த்திகளோடு இப்போதும் காணலாம். செப்பறை மடத்தில் பல சமய நூல் ஆய்வும், சத்சங்கமும், சமய சொற்பொழிவுகளும் நடந்தன. செப்பறை சுவாமிகள் என்று போற்றப்படுகின்ற சிதம்பர சுவாமிகள் ஸ்ரீ ருத்ரத்தை தமிழில் செய்யுளாக மொழி பெயர்த்தருளினார்கள். சித்தாந்த படவிளக்கம் எழுதிய வாலையானந்த சுவாமிகள் செப்பறை மடத்திற்கு விஜயம் செய்துள்ளார்கள்.

திரு. சங்கர சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருவள்ளுவர் மடத்தை நிறுவி அதில் சமய நல்லுரை நிகழவும், திருமுறை பாராயணம், திருக்குறள் விளக்கம் நடைபெற நிதியுதவியும் ஒதுக்கீடு செய்துள்ளார். செப்பறை தல வரலாறு வெளிவர இவரே முதற் காரணமாவார்.

திருவள்ளுவர் மடத்தைச் சார்ந்த சேக்கிழார் மடத்தில் யாழ்ப் பாணத்து பொற்கை சாமிகள் நெடு நாட்கள் தங்கியிருந்து பூசை செய்து வந்தார்கள். இவர்கள் செப்பறை ஸ்ரீ அழகிய கூத்தர் திருவீதி உலா வரும் சமயம் வீதியில் நடனம் ஆடுவார். இராசவல்லிபுரம் கீழரதவீதியில் வாழ்ந்து வந்த சிவபூசகர் சங்கரலிங்கம் பிள்ளை அவர்களின் சமயத் தொண்டு அளவிடற்கரியது.

அப்போதைய பாளையங்கோட்டை நகராட்சியின் ஆணையர் திரு. சிவகுருநாதன் செட்டியார் தினமும் அழகிய கூத்தரை தரிசனம் செய்யும் நியமமுடையவர். இவ்வூர் முக்கிய பிரமுகரும் மக்கள் நலத்தொண்டருமான திரு. R.S. ஆறுமுகம் அவர்கள் அழகிய கூத்தன் மீது பெரும் பக்தி கொண்டு தனது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பேருந்துக்கு "செப்பறை டிரான்ஸ்போர்ட்ஸ்" என்று பெயர் வைத்தார். இராஜவல்லிபுரம் வள்ளல் முத்துசாமி பிள்ளை அவர்கள் தச்சநல்லூர் வ. அழகிய சொக்கநாத புலவரை ஊக்குவித்து திருநெல்வேலி காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் பாடும் படி செய்தார். 10.2.1880-ம் ஆண்டு ஞாயிறன்று இந்த நூல் சுவாமி நெல்லையப்பர் திருக்கோயில் ஊஞ்சல் மண்டபத்தில் அரங்கேறும் போது அழகிய சொக்கநாதப் புலவருக்கு வைரக் கடுக்கண் புனைவித்து பொன்னாடை போர்த்தி கௌரவப்படுத்தினார்.

திராவிட மாபாடியும் தந்தருளிய மாதவச்சிவஞான சுவாமிகள் முதலில் இத்தலத்திற்கு வருகை தந்து அகிலாண்டேசுவரி அம்மை மீது பதிகம் பாடியருளினார். அந்நூலை செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம் என சுவாமிகள் குறிப்பிடுகிறார்கள்.

இலக்கணக் கொத்து ஆசிரியர் சுவாமி நாத தேசிகர் செப்பறைத் திருமடம் 2-ம் தலைவராயிருந்த கனகசபாபதி சிவாச்சாரியாரிடம் வடநூல் கற்றறிந்தார்.

இவ்வூரில் தற்சமயம் செப்பறை சிவநெறி மன்றம், அக்னீசுவரர் நற்பணி மன்றம் இராசை. மாதர் சங்கம் ஆகியவைகள் நல்ல சிவப்பணிகள் ஆற்றிக் கொண்டிருக்கின்றன.

இத்திருக்கோயில் அர்ச்சகர்கள் சிவஸ்ரீ கா. கைலாசப்பட்டர், சிவஸ்ரீ. G. விஸ்வநாத பட்டர், சிவஸ்ரீ சு. முத்துக்குமார பட்டர், ஆகியோர் இத்திருக்கோயில் ஓதுவா மூர்த்திகள், திருவாளர்கள் கந்த ஓதுவார், மகேஸ்வர ஓதுவார், சுந்தரமூர்த்தி ஓதுவார் இவர்கள் வாரிசுகளே இப்போது ஓதுவா மூர்த்திகளாக தொண்டாற்றி வருகின்றனர். திருக்கோயிலில் பழனிக்கம்பர், சுப்பையா கம்பர் (செல்லக் கம்பர் வாரிசுகள்) இப்போது நாதஸ்வரம் வாத்யம் கைங்கர்யம் செய்கிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

16. திருப்பணி

1721-ல் தாமிரபரணி நதியின் வெள்ளத்தால் பழைய திருக்கோயிலை நீர்க் கொண்ட போது பூதவாகனம் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டது. அந்த பூதவாகனம் ஸ்ரீவைகுண்டம் ஆற்றின் கரையில் ஒதுங்க அதை அங்குள்ள சிவாலயத்தில் வைத்து பூசைகள் இயற்றி வருகின்றனர். அப்பூதம் பிள்ளை பிணி தீர்க்கும் மூர்த்தியாகவும் பலருக்கு வேண்டுதல்களை நிறைவேற்றி வைக்கப் படுபவராகவும் போற்றி வணங்கப்பட்டு வருகிறது.

தற்போது நடைபெற்று வருகிற இந்த புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிசேகம் பக்தர் நன்கொடையில் நிகழுகிறது. ரூபாய் 30 லட்சம் திருப்பணி மற்றும் கும்பாபிசேகத்திற்கும், ரூபாய் பத்து லட்சம் புதிய திருத்தேர் உருவாக்கவும், செலவு திட்டத்தில் அடங்கியது. இரும்பு அச்சும், இரும்பு சக்கரங்களும் கொண்டே இத்திருத்தேர் அமைக்கப் பட்டுள்ளது.

திருக்கோயில் குடமுழுக்கு மற்றும் திருப்பணி வகைக்கு இந்து சமய அறநிலையத்துறை ஆதரவால் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி திருக்கோயிலிலிருந்து ரூ.12,10,000/- (பன்னிரெண்டு லட்சத்து பத்தாயிரம்) பெறப்பட்டது. இத்திருக்கோயில் பெரிய மண்டபம் ஒன்று இப்போது திருப்பணி செய்யப்பட்டு அன்னதானம் வகைக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திருக்கோவில் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து 10கி.மீ. தூரத்தில் உள்ளது. நெல்லை சந்திப்பிலிருந்து இராஜவல்லிபுரம்,

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாப்பையாபுரம், கல்குறிச்சி நகர பேருந்தில் வந்து இராஜவல்லிபுரம் இறங்கி 2 கி.மீ. நடந்தால் செப்பறைப்பதிக்கு வந்து சேர்ந்துவிடலாம். முக்கிய திரு நாட்களில் சிறப்புப் பேருந்தும், ஆட்டோக்களும் இயக்கப்படுகின்றன.

இத்திருக்கோயிலில் நித்திய பூசையும், சிறப்புப் பூசைகளும் சிறப்பாக இடைவிடாது நடக்க வைப்பு நிதி வைத்தல் நன்று என அனைவரும் கருதுகின்றனர். எனவே வைப்பு நிதி கொடுக்க சிவ அன்பர்கள் முன்வந்து அளித்தால் சிவ புண்ணியம் பெறுவார்கள்.

<u>ஆடல் வல்லானுக்குரிய ஆறு திருமஞ்சன நாட்கள்</u>

சித்திரையில் ஓண முதல் சீரானி உத்திரமுமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாரும் - பத்திவரை
மாசியர் கன்னி மருவு சதுர்த்தசி மன்று
ஈசர் அபிடேக தினமாம்

என்று திருமஞ்சன நாட்களை ஒரு வெண்பா தெரிவிக்கின்றது.

புகழ்பெற்ற இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்யப் பெற்று 24.1.07 -ஆம் நாள் குடமுழுக்கு மிகுந்த சிறப்பாக நடந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

17. குடமுழுக்கு நிகழ்ச்சிகள்

நிகழும் மங்களகரமான 1182-ம் ஆண்டு விய வருடம் தை மாதம் 10-ம் தேதி 24.01.2007 புதன்கிழமை சுக்லபட்சம் சஷ்டி திதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சிவயோகமும் கௌலவ கரணமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை மணி 9.30க்கு மேல் 10.30க்குள்ளாக மீன லக்னத்தில் திருக்குட முழுக்கு நடைபெற்றது.

செப்பறைத் திருக்கோயில் தக்கார் திரு. சு. கசன்காத்த பெருமாள் திருப்பணிக் குழுவின் செயலாளராகவும், பொருளாளராகவும் இருந்து குட்டமுழுக்கினை செம்மையுற நடத்தினார்கள்.

திருப்பணிக் குழுத் தலைவர் பொறுப்பேற்று, சிவபூசை. க.திருஞானசம்பந்தம் அவர்கள் அழகிய கூத்தர் திருக்கோயிலுக்கு நன்முறையில் தொண்டாற்றிக் குடமுழுக்கிற்கு உறுதுணை செய்தார்.

இவருக்கு உறுதுணையாக திருப்பணிக் குழு உறுப்பினர்கள் திரு. சி. சுப்பிரமணியன் (தலைமை பொறியாளர் ஓய்வு), திரு. ஆர்.எம். கணேச பட்டர், திரு. ஆ. ஆறுமுகம் என்ற முருகன், திரு. ஆர். அழகிய கூத்தன், திரு. வ. முருகேசன், திரு. அ. காளி, திரு. எஸ். வெற்றிவேல், திரு. ஜி. சேதுராமலிங்கம், திருமதி. செ. சக்கரவர்த்தி, திருமதி. எஸ். சரஸ்வதி, திரு. ச. சண்முககோன், திரு. அ. திருஞானசம்பந்தன், திரு. டி. சுப்பிரமணியன், திரு. ச. சங்கரகுத்தாலம், திரு. கே. வெங்கடேஷ், திரு. மா. வேலுசாமி, திரு. எஸ். கோபால்தேவர், திரு. சி. முருகன், திரு. ஆர்.எஸ். முருகன் பிள்ளை ஆகியோர் நல்லாதரவும், ஒத்துழைப்பும் தந்து சிறந்த தொண்டாற்றினார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பணிக் குழுவின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற சிவபூசை. சொ. சுந்தரம்பிள்ளை அவர்கள் சிந்தை இடையறா அன்பும், திருமேனி தன்னில் பொலிவும் கொண்ட திருநாவுக்கரசரை நினைவூட்டும் வண்ணம் வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் குடமுழுக்கு விழாவும், திருப்பணியும், தேரோட்டமும் செவ்விய முறையில் நிகழ்ந்திட பெரும் முயற்சிகள் செய்து அயராது பாடுபட்டு சிறப்பாக நடைபெறச் செய்தார்கள்.

இராசவல்லிபுர ஊர் மக்களும், தமிழகம் தழுவி வாழும், சைவ நெறித் தொண்டர்களும், அல்லும், பகலும் அயராது உழைத்து உயர்ந்தோர் போற்றும் வண்ணம் குடமுழுக்கு நிகழ்ந்திட அருந்தொண்டாற்றினார்கள்.

சர்வசாதகம் சிவஸ்ரீ ஆர்.எம். கணேச பட்டர் அவர்களும், தேர்த்திருப்பணி தொடங்கி, கோயில் திருப்பணி, கும்பாபிஷேக வைபவம் வரை ஒருநாளும் ஓய்வின்றி உடன் பணியாற்றி, தக்க ஆலோசனைகள் சொல்லி நன்கொடையாளர்களைப் பார்க்க உடன் வந்து பெரும் பணியாற்றி கும்பாபிஷேகத்தினை சிறப்பாக நடத்தி தந்தார்கள். திரு. விஸ்வநாதபட்டர் பல லட்ச ரூபாய்க்கான நன்கொடையாளர்களை அழைத்து வந்து கும்பாபிஷேகப் பணிக்கு தக்க துணையாக நின்றார்கள்.

இப்பெருமக்களின் அயரா உழைப்பிற்குச் சான்று கூறும் வண்ணம் குடமுழுக்கு நடந்த 24.01.07-ஆம் நாள் காலை 9.55 மணிக்கு கருடாழ்வார் சங்கநாதம் செய்து திருக்கோயில் விமானங்களில் மேல் வட்டமிட்டு ஆசி கூறினார். கருடாழ்வாரின் சங்கநாதத்தையும், வலஞ்சுற்றி வந்த வனப்பையும் கண்ட மக்கள் எல்லையில்லா மகிழ்வோடு இறைவன் புகழ் பாடிப் போற்றினர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பல்வேறு அமைப்பைச் சார்ந்த ஆடவரும், பெண்டிரும் பன்னிருத் திருமுறைகளை குடமுழுக்கு நாளிலும், குடமுழுக்கு நேரத்திலும் பாடிப் பாடிப் பரவினர்.

கொளுத்தும் வெயிலில் மக்கள் துவண்டுவிடக் கூடாது என்று ராஜபாளையம் ராம்கோ நிறுவனத்தார் கோடைக்கேற்ற குளிர்ந்த நீரை வழங்கி மக்களின் களைப்பை நீக்கினர்.

இராசவல்லிபுரம் ஊராட்சி மன்றத்தினர் தேரோடும் வீதியினையும், திருக்கோயில் மாடவீதியினையும் சுத்தம் செய்தும் குடிதண்ணீர் வசதியும், வாகனங்கள் நிறுத்துமிடமும் ஏற்பாடு செய்து தந்தனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் செப்பறைத் திருக்கோயிலில் தேரோடும் வீதியில் தேரோடியது அந்தத் தேரோட்டத்தைக் கண்டு களித்தவர் சிவபூசை. சொ. சுந்தரம்பிள்ளை. அதன் பின்னர் தேரோடவில்லையே. தேரோடும் வீதிகளும் பழுதுபட்டு விட்டனவே என்று இனி எப்பொழுதுத் தேரோடும் என்று, சுந்தரம் பிள்ளையும், சிவாச்சாரியார்களும், மக்களும் ஏங்கித் தவித்தனர். இவர்களது ஏக்கத்தைக் கண்ட, அழகியகூத்தர் அருள் நோக்கம் கொண்டார். "அருள்மிகு அழகிய கூத்தர் பக்தர்கள் சங்கம்" அந்தப் பொறுப்பினை ஏற்றது. இச்சங்கத்தின் கௌரவத் தலைவர். தளவாய். தீ. இராமசாமி, தலைவர். க. திருஞானசம்பந்தம், சிவஸ்ரீ கணேச சிவாச்சாரியார், பொறியாளர் சி. சுப்பிரமணியம், ஆர். அழகியகூத்தன், ஓய்வுப் பெற்ற தாசில்தார் எஸ். சங்கர குற்றாலம், துணைத் தலைவர் சிவபூசை. சொ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் முன்னவனை முன்னிறுத்தி முயன்று 10 லட்சம் மதிப்பில் அழகிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கூத்தர் தேரைச் செய்து விட்டனர். 35 அடி உயரத்தில் கண்ணைக் கவரும் கவினோடு அழகிய கூத்தரின் அழகியத் தேர் காட்சியளிப்பதைக் காணலாம்.

24.01.07 -ஆம் நாள் குடமுழுக்கு நிறைவுற்றதும் அழகிய கூத்தரை அணிகலன்கள் பூட்டி அழகு கூட்டி, அரும்பெருந் தேருக்கு அம்மையுடன் நண்பகல் 1.45 மணிக்கு எழுந்தருளச் செய்தனர். அம்மையும், அழகிய கூத்தரும் அழகு மிகுந்த தேரில் அமர்ந்திருக்க ஆயிரமாயிரம் மக்கள் அளவிலா மகிழ்வோடு தேரை வடம் பிடித்து தேரோடும் வீதியில் உலா வந்தனர். ஆடி வந்த தேரில், ஆடியே உலகை ஆட்டுவிக்கும் கூத்தப் பெருமானின் அழகினை அன்று கண்டு கண்டு மக்கள் மகிழ்ந்தனர். ஆடி ஆடி அசைந்து அசைந்து தேர் வந்திட மக்கள் பாடிப் பாடிப் பரவினர்.

தேரை வடம் பிடித்துத் தொட்டுக் கொடுத்த சட்டமன்ற உறுப்பினர் திரு. மாலைராஜா, தேரோடும் வீதியைச் சீசப்பனிட்டுக் கொடுத்த சீர்த்தியாளர் இவர்கள் குடமுழுக்கில் கலந்து கொண்டு கூத்தனை வழிப்பட்டு சென்றனர்.

முன்னாள் அமைச்சர் நயினார் நாகேந்திரன் அவர்கள், கோயில் திருப்பணிகள் பலவற்றிற்கும் உறுதுணை செய்ததுடன், குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு கூத்தனை வழிபட்டுச் சென்றனர்.

திருநெல்வேலியின் இணை ஆணையர் திரு. பா. பாஸ்கரன் அவர்களும், உதவி ஆணையர் முத்து தியாகராஜன் அவர்களும் குடமுழுக்கு நாளில் விழாவில் கலந்து கொண்டு சிறப்பளித்தனர்.

திருநெல்வேலி மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் ஏ.எல். சுப்பிரமணியம் அவர்கள், குடமுழுக்கில் கலந்து கொண்டு அழகிய கூத்தரை வணங்கி மகிழ்ந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சைவத்தையும், தமிழையும் இரு கண்கள் எனக் கொண்ட குருமகா சந்நிதானங்களான திருவாவடுதுறை, தருமரபுரம், திருப்பனந்தாள், செங்கோல் திருமடம் ஆகிய சந்நிதானங்களின் அருளாசியோடும் குடமுழுக்கு சிறப்பாக நடந்தேறியது.

செங்கோல் ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் எஜமான் சுவாமிகளும், தருமபுரம் கட்டளைத் தம்பிரான் சுவாமிகளும் குடமுழுக்கில் கலந்து கொண்டு அருள்பாலித்தார்கள்.

செப்பறைத் திருக்கோயிலின் தெப்பக் குளத்தை தூர் வாரினார்கள், புதிய தேர் இராஜவல்லிபுரம் அக்னீஸ்வரர் திருக்கோயிலில் இருந்து செப்பறை அழகிய கூத்தர் திருக்கோயிலுக்கு கொண்டு வர சங்கர்நகர் இந்தியா சிமெண்ட் நிறுவனத்தார் பெரிதும் உதவினார்கள். நன்றி பாராட்டத்தக்கது. தேரோட்டத்தன்றும் உதவினார்கள்.

செப்பறைத் திருக்கோயிலின் முன்னர் உள்ள அன்னதான மண்டபம் புனிதவதியார் என்ற காரைக்காலம்மையாரின் மணிமண்டபமாகும். இம் மண்டபத்தைத் திருப்பணிக் குழுவினர், செப்பம் செய்திருப்பது பாராட்டத்தக்கது.

தேர் நிலையம் திரு. மயில்பாண்டி தேவர் அவர்களால் புதுப்பிக்கப்பட்டு பாதுகாப்பு செய்யப்பட்டது.

புதிய அழகான தேர் மயிலாடி நாகமுத்து ஸ்தபதி அவர்களால் வடிவமைக்கப்பட்டு செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரியாதைக்குரிய ஜி. பிரகாஷ் அவர்கள் அந்த அந்த அதிகாரிகளுக்கு உடனடியாக உத்திரவிட்டு, ஆவனச் செய்திட ஆணையிட்டு, குடமுழுக்குச் செம்மையாக நடந்திட உறுதுணை செய்தார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையை ஏற்று, தீயணைப்புத்துறை, சுகாதாரத்துறை, பாதுகாப்புத்துறை, போக்குவரத்துத் துறை ஆகிய பல்வேறு துறைகளின் அதிகாரிகள் அருமையாகச் செயல்பட்டு, குடமுழுக்கில் எந்த ஒரு குறையுமின்றி, ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து மக்களின் பாராட்டுக்களைப் பெற்றனர். மக்களும், திருக்கோயில் நிர்வாகமும் இவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டன.

செப்பறைத் திருக்கோயில் குடமுழுக்கு விழாவினை தாங்கள் தங்கள் விழாவாகக் கொண்டு, அரசுப்பேருந்துகளும், தனியார் பேருந்துகளும், ஆட்டோ ஓட்டுநர்களும் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றினர்.

நடுக்காட்டில் ஊரோ, மக்களோ இல்லாத இடத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி, பக்தி மணம் கமழப் பாடி குடமுழுக்கினைக் கண்டு களித்துப் நற்பேறு பெற்றது வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் குடமுழுக்கு விழாவினை மிகச் சிறப்பாக நடத்திய, திருக்கோயில் தக்கார். சு. கசன்காத்த பெருமாளையும், தொண்டர்களின் ஆணியான சிவபூசை. சொ. சுந்தரம்பிள்ளை அவர்களையும் பாராட்டாமல் இருக்க இயலாது.

பெரும்பான்மையான மக்களுக்கு கும்பாபிஷேக
அன்னம்பாலிப்பு வழங்கியவர்கள்

M. மாயாண்டி (எ) பால்துரை (சன் டிரான்ஸ்போர்ட்)
T. இளஞ்செழியன் அவர்கள் (உதயம் GEMS)

அழகிய கூத்தர் அருளால் இவர்களுக்கு மேலும் மேலும் மேன்மைகள் சிறக்க அந்த எல்லையில்லாப் பரம்பொருளை வேண்டுவோமாக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
திருவுருமாமலை, திருப்புகழ் சபை, திருவாசக முற்றோதுதல் வழிபாட்டுக்குழு திரு. K. சுப்பிரமணியம் B.E. அவர்கள் (தலைமை மின் பொறியாளர் ஓய்வு) தலைமையிலும், திருவுருமாமலை, பன்னிரு திருமுறை வழிபாட்டுக்குழு திருமுறை ஆசிரியர் திருமுறைக் கலாநிதி இரா. வள்ளிநாயகம் அவர்கள் தலைமையிலும் இணைந்து ஒன்பது நாளும் பன்னிரு திருமுறை பாராயணம் நடைபெற்றது.

குடமுழுக்கு விழாவில் திருவள்ளுவர் மடம் சார்பில் சமய சொற்பொழிவுகள் நடைபெற்றன.

இராசை மகளிர்மன்றம் அக்னீஸ்வரர் இளைஞர் நற்பணி மன்றம், செப்பறை சிவநெறி மன்றம் இம்மூன்று மன்றத்தினரும் திருக்கோவிலுக்கும், திருக்குடமுழுக்கு விழாவிற்கும் ஆற்றிய தொண்டு சிறப்புற இருந்தது. முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும் தற்சமயம் வடபூமி அம்மன் திருக்கோவில் அறங்காவலராக செயலாற்றும் பெரியவீட்டு ஆ. முருகன் என்ற ஆறுமுகம் அவர்கள் தொண்டும் மற்றும் இராசை முன்னாள் கவுன்சிலர் அ. காளி அவர்களின் தொண்டும் பாராட்டத்தக்கது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஓம் கணபதிக்கு வணக்கம்

18. ஸ்ரீ-ல-ஸ்ரீ செப்பறைச் சிதம்பர சுவாமிகள் வரலாறு

இலங்கைத் தீவில் யாழ்ப்பாணத்தை அடுத்து கொடிமடம் என்ற ஊர் உள்ளது. அதில் தூய சைவ வேளாளர் மரபில் வேலாயுதம் பிள்ளை வாழ்ந்தார். அவர் செய்தவப் பேற்றால், நமது செப்பறைச் சிதம்பர சுவாமிகள் தோன்றியருளினார்.

இளமையிலேயே கற்க வேண்டிய நூல்களை எல்லாம் தக்கார்வாய்க் கேட்டுணர்ந்தார், கற்ற வண்ணமே ஒழுகியும் வந்தார்கள். தமிழுடன், வடமொழி அறிவும் பெற்றார்கள்.

இளமையிலேயே சைவானுட்டானமும் சிவபூசையும் புரிந்தார்கள். ஞானநூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல் ஆகிய சிவஞான பூசைகளையும் புரிந்து வந்தார்கள்.

இளமையிலேயே துறவுக்கோலம் பூண்டார்கள். இறுதிவரை பிரம்மசாரியராகவே வாழ்வது என்று உறுதி கொண்டு ஒழுகினார்கள். அதனால் "நைட்டிக பிரமசாரி" எனப்பட்டார். இரத்தலின் இழிவை உணர்த்த சுவாமிகள் யாரிடமும் இரப்பதில்லை என்று முடிவுசெய்து ஒழுகினார்கள். அதனால் "அயாசிதன்" எனப்பட்டார்கள்.

சுவாமிகள் இந்தியாவில் தெரிசிக்க முத்தி தரும் தில்லையைக் காண ஆசைப்பட்டார்கள். அவ்வாசையே நமக்கு "சுவாமிகளை" தந்தது. சுவாமிகள் தம் நாட்டுத் திருக்கேதீச்சுரப் பெருமானைத் தொழுது விடை கொண்டு தில்லையம்பதியினை அடைந்தார்கள். பொன் மன்றத்தைக் கண்டார்கள், "என்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வந்தாய் எனும் எம்பெருமானின் கைக்குறிப்பினை உணர்ந்தார்கள். இரண்டு கைகளும் தாமாகவே சிரமேற் குவிந்தன. கண்கள் ஆனந்த அருவி பொழிந்தன, மெய்சிலிர்த்து "ஐந்து பேரறிவும்" என்ற பாடலின் அனுபவப் பயனைப் பெற்றுத் தம்மையும் மறந்தனர். இவ்வாறே, ஒருநாள் போலவே பல நாளும் தரிசித்து ஊனாலும் உயிராலும் உள்ள பயனை அடைந்து உவந்திருந்தனர்.

ஒருநாள் சுவாமிகள் இறக்க முத்தி தரும் காசியம் பதியை அடைந்து தரிசிக்க விழைந்தனர். "அப்பரடிகள்" போன்று நடந்தே வடநாட்டுத் தலங்களை தரிசித்துக் கொண்டு காசியம்பதியை அடைந்து கங்கை நீராடி விஸ்வநாதரைத் தரிசித்தார்கள்.

பின்னர் தில்லையைத் தரிசிக்க நினைந்து புறப்பட்டார்கள். தில்லையை அடைந்து தரிசித்து வந்தார்கள். மூவர் பாடல் பெற்ற தலங்களை ஒன்றுவிடாமல் மூவேந்தர்கள் நாட்டிலும் சென்று தரிசித்தார்கள். பின் நெல்லையை அடைந்து தாமிரவருணியில் நீராடி செப்பறை நடராசரை ஆர்ந்த காதலினால் அன்பு செய்து தரிசித்து தோத்திரம் செய்தார்கள்.

செப்பறை மடாலய கர்த்தர் திரு. கனகசபாபதி அவர்கள் சுவாமிகளின் நிலைகண்டு அவர்களை இராஜவல்லிபுரத்தில் உள்ள தம்மடத்தில் இருக்கச் செய்து உபசரித்து வந்தார்கள். சுவாமிகள், வரும் பேரறிஞர்கட்கெல்லாம் தாம் கண்ட நுண் பொருள்களை எல்லாம் விளக்கியருளி வந்தார்கள். இவ்வாறு பல ஆண்டுகள் செப்பறையில் தங்கிப் பணியாற்றினார்கள்.

பின்பு சுவாமிகள் இரண்டாம் முறை வாழ்நாளளவும் காசியில் தங்க எண்ணினார்கள். உடல்நலம் குன்றியபடியினால் ஆறுமாத காலம் தங்கியிருந்து பின் தில்லை மாநகரை அடைந்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

1912-ல் யாழ்பாணத்து அன்பர்கள் தாமாக வந்து மடம் கட்ட நன்கொடைப் பொருளைத் தந்தார்கள். அடிகளார் அப்பொருள் கொண்டு இடம் வாங்கி மடம் அமைத்து அதற்குச் "சிவஞான திருத்தளி" எனப் பெயரிட்டனர். அங்கு வரும் அன்பர்கட்கு ஞான உபதேசம் செய்தமர்ந்தனர்.

பின்பு ஒருநாள் செப்பறைக்குச் சென்றார்கள். இடையிலுள்ள தாயுமானவ சுவாமிகள் மடாலயத்துக்குச் சென்று ஸ்ரீசபாபதி பண்டார சந்நிதி அவர்களை முறைப்படி வணங்கி நின்றனர். சந்நிதானம் அவர்கள் அன்பர் பக்குவ நிலைகண்டு ஞான உபதேசம் செய்து வைத்து அங்கேயே இருக்கப் பண்ணினார்கள்.

பின்னர் சிதம்பரம் ஆடூர் விஸ்வராய கணபதிப்பிள்ளை அவர்கள் இல்லத்திலேயே தங்கினார்கள். அநேக நூல்களும் மறுப்பு நூல்களும் எழுதினார்கள். அநேக ஊர்களில் சிவலிங்கப் பிரதிட்டை செய்யத் தூண்டி முடித்தனர். சுவாமிகளின் மாணாக்கர்கள் அநேகர் அவர்களுள் விஸ்வராய கணபதிப் பிள்ளை, பின்னலூர் ராம- கணபதிப் பிள்ளை, பேராசிரியர் சிவப்பிரகாசம் பிள்ளை, ஆ.க. கணபதிப்பிள்ளை, புலவர் பெரியசாமிப்பிள்ளை, தலக்குளம் மங்களம் பிள்ளை, முதலியவர்கள் ஆவார்கள்.

பின்னர் செப்பறை சென்று பல நாள் தங்கிப்பின் தில்லையை தெரிசிக்க வந்தார்கள். வரும் வழியில் திட்டை அன்னையப்பன் பேட்டை தாயுமானசுவாமிகளது மடத்திலுள்ள தமது ஞானகுருவினைத் தரிசித்துத் தங்கினார்கள். உடல்நலம் குன்றியிருந்தும் சிவபூசை செய்து நிட்டை கூடியிருந்தார்கள். அந்த நிலையிலேயே சுவாமிகள் அவர்கள் தமது குருதேவரின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பெருங்குளம் செங்கோல் ஆதினம் 102வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தர சத்திய ஞான பரமாச்சார்யா ஸ்வாமிகள்
எழுந்தருளல்

திருப்பனந்தாள் காசித் திருமடத்து அதிபர் கயிலை மாமுனிவர் காசி வாசி
ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதினம்
23வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச
தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் எழுந்தருளல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
முன்னிலையிலேயே எங்கும் நிறை இறைவன் திருவடி நீழலை புரட்டாசி மூலத்தில் ஒன்றிய நிலையினை அடைந்தார்கள்.

செப்பறை திருக்கோவில் ஆதிவரலாறு செப்பறை மடத்திலுள்ள பழைய சுவடிகளை தஞ்சை சரஸ்வதி மஹாலில் மொழிபெயர்த்து அனுப்பியது மூலம் செப்பறையின் ஆதிவரலாறு அறிய முடிந்தது.

செப்பறைச் சாமிகளின் திருநட்சத்திரம்

"மென்கண்டான் ஏழிநூற்றேழி மேவுபுரட் டாசிபன்மூன்
றுய்திங்கள் மூலமதில் உய்ந்தனனே - செய்ய
சிதம்பரமும் செப்பறையும் சேர்ந்த திருநாமம்
நிதம்பெற நித்யானந்த நேர்."

செப்பறை அழகிய கூத்தர் திருக்கோவில்
நடை திறந்திருக்கும் நேரம் :

காலை 6.30 முதல் 9.30

மாலை 4.30 முதல் 7.30 வரை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம்

கணபதிக்கு வணக்கம்

திருச்சிற்றம்பலம்

சிவ சிவ

ஸ்ரீ மகா ருத்திர பாராயணம்

1-வது அனுவாகம்

ஓம்உருத் திரஉன் பூசைக்கு வணக்கம்
வாம்அத் திரத்தொடு தனுவுக்கு வணக்கம்
உவைதங்கு முன்னஉக் கைகட்கு வணக்கம்
மிகுசாந்தம் அத்திரம் தனுவும்அச் சாந்தம்
தகுசாந்தம் தூணி தானும்இம் மூன்றால்
எம்மனோர்க் கின்பம் இனிதளித் திடுக!
எம்மனோர்க் கிருஞ்சுகம் ஈயும்மேற் கோளாய்
அறமலம் அறிவை அருளும்உன் உருவம்
சிறுசுகம் பெருஞ்சுகம் தருந்திரு உருவம்
பெருஞ்சுக உருவம் பெற்றசித் துருவால்
திருந்தெம் அறிவைத் தெளிவித் திடுக!
கிரிஇருந் தின்பம் கெழுவுவித் திடுவோய்!
அருளுமேற் கோளான் அருளும் அவனே!
எய்யுமா கையில் இருக்கும் அத்திரத்தைச்
செய்து சாந்தம் சிறுவர் சிறுமியர்
ஆவுடன் எருமை தாவிடுங் கன்றே
நன்னிலம் வீடு நலந்தரு புன்னிலக்
கிம்சை புரிதலை என்றும் ஒழிகவே!
வேதப் பொருளே விமல உருவே
ஓதும்எத் துதிஅவ் வுயர்பசுப் பிள்ளைகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
முன்னிலையிலேயே எங்கும் நிறை இறைவன் திருவடி நீழலை புரட்டாசி மூலத்தில் ஒன்றிய நிலையினை அடைந்தார்கள்.

செப்பறை திருக்கோவில் ஆதிவரலாறு செப்பறை மடத்திலுள்ள பழைய சுவடிகளை தஞ்சை சரஸ்வதி மஹாலில் மொழிபெயர்த்து அனுப்பியது மூலம் செப்பறையின் ஆதிவரலாறு அறிய முடிந்தது.

செப்பறைச் சாமிகளின் திருநட்சத்திரம்

"மென்கண்டான் ஏழிநூற்றேழி மேவுபுரட் டாசிபன்மூன்
றுய்திங்கள் மூலமதில் உய்ந்தனனே - செய்ய
சிதம்பரமும் செப்பறையும் சேர்ந்த திருநாமம்
நிதம்பெற நித்யானந்த நேர்."

செப்பறை அழகிய கூத்தர் திருக்கோவில்
நடை திறந்திருக்கும் நேரம் :

காலை 6.30 முதல் 9.30

மாலை 4.30 முதல் 7.30 வரை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம்
கணபதிக்கு வணக்கம்
திருச்சிற்றம்பலம்

சிவ சிவ

ஸ்ரீ மகா ருத்திர பாராயணம்

1-வது அனுவாகம்

ஓம்உருத் திரஉன் பூசைக்கு வணக்கம்
வாம்அத் திரத்தொடு தனுவுக்கு வணக்கம்
உவைதங்கு முன்னஉக் கைகட்கு வணக்கம்
மிகுசாந்தம் அத்திரம் தனுவும்அச் சாந்தம்
தகுசாந்தம் தூணி தானும் இம் மூன்றால்
எம்மனோர்க் கின்பம் இனிதளித் திடுக!
எம்மனோர்க் கிருஞ்சுகம் ஈயும்மேற் கோளாய்
அறமலம் அறிவை அருளும்உன் உருவம்
சிறுசுகம் பெருஞ்சுகம் தருந்திரு உருவம்
பெருஞ்சுக உருவம் பெற்றசித் துருவால்
திருந்தெம் அறிவைத் தெளிவித் திடுக!
கிரிஇருந் தின்பம் கெழுவுவித் திடுவோய்!
அருளுமேற் கோளான் அருளும் அவனே!
எய்யுமா கையில் இருக்கும் அத்திரத்தைச்
செய்து சாந்தம் சிறுவர் சிறுமியர்
ஆவுடன் எருமை தாவிடுங் கன்றே
நன்னிலம் வீடு நலந்தரு புன்னிலக்
கிம்சை புரிதலை என்றும் ஒழிகவே!
வேதப் பொருளே விமல உருவே
ஓதும்எத் துதிஅவ் வுயர்பசுப் பிள்ளைகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நோயின்மை தம்முள் உறுநண் புடைமை
தாம்உள வாகத் தருமங் கலமா
உறும்அத் துதியால் உனைத்துதிக் குதும்நாம்
ஓரம் உரைத்தோய் உற்றோய் முதலில்
சார்வாய் அன்பர்தம் இதயம் தொறுமே
வைத்திய துன்புசெய் மறைசெந் துவினுடன்
தைத்தியர் பாந்தள் தேள்இவை தம்மைக்
கொலைபுரிந் தெம்மிழுக் கெல்லாம் சொலுவாய்
அலைநீ மறைத்தங் கறைகுதி மாதோ!
செம்பிற் கனலாம் செம்மையன் பொன்னின்
இம்பர்க் கருள எழுந்திடும் இந்த
உருத்திரன் கணங்கள் உம்பரும் இம்பரும்
திக்குவி திக்கும் செறிந்தா யிரமாம்
உவன்அதன் சினமோ டுருத்திரன் சினமும்
தவிர்க்குதும் வணக்கம் அதுதன் ணானே
எவன்நீல கண்டன் இவன்விலோ சிதனே
உவன்வெளிப் படையன் உவ்உருத் திரனைக்
கண்டனர் இடையர் கண்டனர் நன்னீர்
கொண்டு குறுகுவோர் உதுவுமற் றன்றி
உலகில் உயிரெலாம் கண்டன உவனை
தன்னை அறியும் அறிவுதந் தவன்எமைச்
சுகமிகச் செய்க! அகமுகத் துற்றே
கண்ணா யிரத்தன் கண்ணிய ஈவோன்
சொன்னஇத் துதிஅந் நீலகண் டற்காம்
இன்ன உருத்திரற் கெவ்வுருத் திரகணம்
மன்னும் அவைக்குநான் வணக்கம் புரிந்தேன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மந்திரப் பதிக்கு வணக்கம் வாணிகர்
அங்காடி புரக்கும் அவற்கு வணக்கம்
அதிபதி புதருக் கவற்கு வணக்கம்
புவியைப் படைக்கும் உவற்கு வணக்கம்
தவிராப் பூசைத் தவருள் இருப்போன்
பயிருக் கதிபதி தனைப்பணி குதுமே!
பெருமுழக் கனுக்கு வணக்கம் பகைவரை
அழுதிட அடிக்கும் அவற்கு வணக்கம்
பதாதிப் படையுடைப் பதிக்கு வணக்கம்
எங்கும் இருக்கும் இவற்கு வணக்கம்
அன்பர்க் கருளும் அவற்கு வணக்கம்
அன்பர்க் கதிபதி தனைவணங் குதுமே!

இரண்டாவது அனுவாகம் முற்றும்.

ஓம்
சிவ சிவ

3-வது அனுவாகம்

பகைவரை மதியாப் பகவற்கு வணக்கம்
திசைசூழ்ந் தொறுக்கும் சேனைக் கதிபதி
அவனாம் உருத்திரன் அவற்கு வணக்கம்
பெருங்கள் வனுக்கு வணக்கம் கத்தி
உறுங்கை யனுக்கு வணக்கம் ஒளிந்த
திருடற் கதிபதி இவற்கு வணக்கம்
எய்திடப் பாணம் எடுத்தோற்கு வணக்கம்
பெய்யுந் தூணி பிடித்தாற்கு வெளிப்படச்
செய்யுந் திருட்டதி பதிக்கு வணக்கம்
கவடில் திருடுமக் கள்வற்கு வ்ணக்கம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நோயின்மை தம்முள் உறுநண் புடைமை
தாம்உள வாகத் தருமங் கலமா
உறும்அத் துதியால் உனைத்துதிக் குதும்நாம்
ஓரம் உரைத்தோய் உற்றோய் முதலில்
சார்வாய் அன்பர்தம் இதயம் தொறுமே
வைத்திய துன்புசெய் மறைசெந் துவினுடன்
தைத்தியர் பாந்தள் தேள்இவை தம்மைக்
கொலைபுரிந் தெம்மிழுக் கெல்லாம் சொலுவாய்
அலைநீ மறைத்தங் கறைகுதி மாதோ!
செம்பிற் கனலாம் செம்மையன் பொன்னின்
இம்பர்க் கருள எழுந்திடும் இந்த
உருத்திரன் கணங்கள் உம்பரும் இம்பரும்
திக்குவி திக்கும் செறிந்தா யிரமாம்
உவன்அதன் சினமோ டுருத்திரன் சினமும்
தவிர்க்குதும் வணக்கம் அதுதன் னானே
எவன்நீல கண்டன் இவன்விலோ சிதனே
உவன்வெளிப் படையன் உவ்உருத் திரனைக்
கண்டனர் இடையர் கண்டனர் நன்னீர்
கொண்டு குறுகுவோர் உதுவுமற் றன்றி
உலகில் உயிரெலாம் கண்டன உவனை
தன்னை அறியும் அறிவுதந் தவன்எமைச்
சுகமிகச் செய்க! அகமுகத் துற்றே
கண்ணா யிரத்தன் கண்ணிய ஈவோன்
சொன்னஇத் துதிஅந் நீலகண் டற்காம்
இன்ன உருத்திரற் கெவ்வுருத் திரகணம்
மன்னும் அவைக்குநான் வணக்கம் புரிந்தேன்

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மந்திரப் பதிக்கு வணக்கம் வாணிகர்
அங்காடி புரக்கும் அவற்கு வணக்கம்
அதிபதி புதருக் கவற்கு வணக்கம்
புவியைப் படைக்கும் உவற்கு வணக்கம்
தவிராப் பூசைத் தவருள் இருப்போன்
பயிருக் கதிபதி தனைப்பணி குதுமே!
பெருமுழக் கனுக்கு வணக்கம் பகைவரை
அழுதிட அடிக்கும் அவற்கு வணக்கம்
பதாதிப் படையுடைப் பதிக்கு வணக்கம்
எங்கும் இருக்கும் இவற்கு வணக்கம்
அன்பர்க் கருளும் அவற்கு வணக்கம்
அன்பர்க் கதிபதி தனைவணங் குதுமே!

இரண்டாவது அனுவாகம் முற்றும்.

ஓம்
சிவ சிவ

3-வது அனுவாகம்

பகைவரை மதியாப் பகவற்கு வணக்கம்
திசைசூழ்ந் தொறுக்கும் சேனைக் கதிபதி
அவனாம் உருத்திரன் அவற்கு வணக்கம்
பெருங்கள் வனுக்கு வணக்கம் கத்தி
உறுங்கை யனுக்கு வணக்கம் ஒளிந்த
திருடற் கதிபதி இவற்கு வணக்கம்
எய்திடப் பாணம் எடுத்தோற்கு வணக்கம்
பெய்யுந் தூணி பிடித்தாற்கு வெளிப்படச்
செய்யுந் திருட்டதி பதிக்கு வணக்கம்
கவடில் திருடுமக் கள்வற்கு வ்ணக்கம்

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்றுமித் திருட்டியல் புடையற்கு வணக்கம்
தெளிந்தார் இடத்தில் திருடும் திருடற்
கதிபதி தனக்கு வணக்கம் அன்றித்
திருடத் திரியும் இவற்கு வணக்கம்
சருவ திசையினும் சரிக்கும் அவருக்கு
வணக்கம் திருட வனத்தில் மறைந்த
திருடற் கதிபதி இவற்கு வணக்கம்
யந்திரத் தால்தனைப் புரப்பாற்கு வணக்கம்
பகையைக் கொல்லும் பரிவுமிக் குடைய
உருத்திரன் உவற்கு வணக்கம் வயலிடைச்
சாலியைத் திருடும் திருடற் கதிபதி
ஆம்உருத் தரித்த அவற்கு வணக்கம்
வாளுடை யவற்கு வணக்கம் இரவில்
தாளிற் சரிக்கும் அவற்கு வணக்கம்
கொன்று திருடும் திருடற் கதிபதி
என்று வணங்குவது மிவ்வுருத் திரனைத்
தலைப்பாகை தலையில் தரித்தாற்கு வணக்கம்
மலைப்பால் சரிக்கும் அவற்கு வணக்கம்
புவியைத் திருடும் திருடற் கதிபதி
என்று வணங்குவது மிவ்வுறுத் திரனை
அத்திரத் தார்உரு வானோற்கு வணக்கம்
அத்திரத் தவரால் புரக்கும் அவர்உருப்
பற்றிடும் உங்களைப் பணிகுதும் மாதோ!
நாணைத் தனுநுனி நாட்டும் அவற்கு
வணக்கம் நாணிடை அம்புவைத் திட்ட
உருத்திரர் உமக்கு வணக்கம் உதன்றி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம்
சிவ சிவ

5-வது அனுவாகம்

வணங்குதும் பவனை உருத்திரன் தன்னை
வணங்குதும் சருவனைப் பசுபதி தன்னை
சிதகண்டன் நீலகண் டற்கு வணக்கம்
சடையன் முண்டிதன் தனக்கு வணக்கம்
இன்னூ றாயிரம் விழியற்கு வணக்கம்
வணங்குதும் கிரீசன் சிபிவீட் டன்தனை
அடியர் கருதிய படியெலா மீவோன்
உயருமம் புடைய உவனை வணங்குதும்
வணங்குதும் குறளைச் சிற்றுரு உடையனை
வணங்குதும் சத்தினைப் பரப்பிர மத்தினை 10
வணங்குதும் பரனைப் பரத்துதிக் குரியனை
வணங்குதும் முன்னை அயற்குமுன் னோனை
வணங்குதும் வியாபகன் விரைந்து செல்வோனை
வணங்குதும் வேகநீர் பெருநீர் உருவனை
வணங்குதும் அலையுடன் ஒலியினீர் உருவனை
வணங்குதும் தீயுருச் சிறுநதி உருவனை 16

ஐந்தாவது அனுவாகம் முற்றும்

ஓம்
சிவ சிவ

6-வது அனுவாகம்

வணக்கம் காரணன் காரியன் தனக்கு
வணக்கம் முன்னவன் பின்னவன் தனக்கு
வணக்கம் குமாரன் குழவியா னோற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்றுமித் திருட்டியல் புடையற்கு வணக்கம்
தெளிந்தார் இடத்தில் திருடும் திருடற்
கதிபதி தனக்கு வணக்கம் அன்றித்
திருடத் திரியும் இவற்கு வணக்கம்
சருவ திசையினும் சரிக்கும் அவருக்கு
வணக்கம் திருட வனத்தில் மறைந்த
திருடற் கதிபதி இவற்கு வணக்கம்
யந்திரத் தால்தனைப் புரப்பாற்கு வணக்கம்
பகையைக் கொல்லும் பரிவுமிக் குடைய
உருத்திரன் உவற்கு வணக்கம் வயலிடைச்
சாலியைத் திருடும் திருடற் கதிபதி
ஆம்உருத் தரித்த அவற்கு வணக்கம்
வாளுடை யவற்கு வணக்கம் இரவில்
தாளிற் சரிக்கும் அவற்கு வணக்கம்
கொன்று திருடும் திருடற் கதிபதி
என்று வணங்குவது மிவ்வுருத் திரனைத்
தலைப்பாகை தலையில் தரித்தாற்கு வணக்கம்
மலைப்பால் சரிக்கும் அவற்கு வணக்கம்
புவியைத் திருடும் திருடற் கதிபதி
என்று வணங்குவது மிவ்வுறுத் திரனை
அத்திரத் தார்உரு வானோற்கு வணக்கம்
அத்திரத் தவரால் புரக்கும் அவர்உருப்
பற்றிடும் உங்களைப் பணிகுதும் மாதோ!
நாணைத் தனுநுனி நாட்டும் அவற்கு
வணக்கம் நாணிடை அம்புவைத் திட்ட
உருத்திரர் உமக்கு வணக்கம் உதன்றி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓம்
சிவ சிவ

5-வது அனுவாகம்

வணங்குதும் பவனை உருத்திரன் தன்னை
வணங்குதும் சருவனைப் பசுபதி தன்னை
சிதகண்டன் நீலகண் டற்கு வணக்கம்
சடையன் முண்டிதன் தனக்கு வணக்கம்
இன்னூ றாயிரம் விழியற்கு வணக்கம்
வணங்குதும் கிரீசன் சிபிவீட் டன்தனை
அடியர் கருதிய படியெலா மீவோன்
உயருமம் புடைய உவனை வணங்குதும்
வணங்குதும் குறளைச் சிற்றுரு உடையனை
வணங்குதும் சத்தினைப் பரப்பிர மத்தினை 10
வணங்குதும் பரனைப் பரத்துதிக் குரியனை
வணங்குதும் முன்னை அயற்குமுன் னோனை
வணங்குதும் வியாபகன் விரைந்து செல்வோனை
வணங்குதும் வேகநீர் பெருநீர் உருவனை
வணங்குதும் அலையுடன் ஒலியினீர் உருவனை
வணங்குதும் தீயுருச் சிறுநதி உருவனை 16

ஐந்தாவது அனுவாகம் முற்றும்

ஓம்
சிவ சிவ

6-வது அனுவாகம்

வணக்கம் காரணன் காரியன் தனக்கு
வணக்கம் முன்னவன் பின்னவன் தனக்கு
வணக்கம் குமாரன் குழவியா னோற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வணக்கம் வெரிநிடை வேரிடை யோற்கு
வணங்குதும் மனிதனைச் சரித்திடும் அவனை
வணங்குதும் நமனொடு சுவர்க்க வாசியை
வணங்குதும் பயிரொடு களத்தின் வாசியை
வணங்குதும் நூலதின் முடிவின் வாசியை
வணங்குதும் புதரொடு வனத்தின் வாசியை
வணங்குதும் ஒலியெதிர் ஒலியாயி னானை 10
வணங்குதும் சேனையை விரையும் தேரை
வணங்குதும் சூரனைத் துட்டநிக் கிரகனைக்
கவசனைப் பாகர்ப் புரப்போனை வணங்குதும்
தலையிற் பாகை தரித்தோனை வணங்குதும்
வணங்குதும் கவசி வடிவுடை யோனை
வணங்குதும் மாப்புகழ் உடைப்படை யோனை 16

ஆறாவது அனுவாகம் முற்றும்

ஓம்

சிவ சிவ

7-வது அனுவாகம்

வணங்குதும் குறுந்தடி துந்துபி வடிவனை
வணங்குதும் பின்னிடாப் பெருவலி உருவனைப்
பகைவர் சைனிய வலிநிலை இதுவென்று
இனிதாயும் இவனை வணங்குது மன்றி
வணங்குதும் தூதுடன் ஒற்றாயி னானை
வணங்குதும் தூணியன் வாளினன் னானை
வணங்குதும் கூரம் புடையன் தன்னை
வணங்குதும் ஆயுதம் பலஉடை யோனை
வணங்குதும் நற்றனு நற்படை யோனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொடியரை அறுத்தங் கடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்
துயர்கொடி யர்க்குறுத் தடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்
கொடியரை நேடி அடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்
கொடியரை ஒறுத்தங் கடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்
கொடியருக் கின்றி அடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்

ஒன்பதாவது அனுவாகம் முற்றும்

ஓம்.

சிவ சிவ

10-வது அனுவாகம்

இழித்திடப் படுவோய் அன்னத்திற் கிறைவ!
நீலலோ கிதபல் இலம்படு நிலைய
சிறுவர் சிறுமியர் எருமை பசுமுதல்
இவைதமை அச்சுறுத் தற்க! இவைதாம்
இறப்பொடு நோயிலா திருக்க அருளுக!
உருத்திர சாந்தி சாந்தி தாமுமாய்
நோய்க்கு மருந்தாய்அப் பிறப்பறுத் திடும் ஓர்
நன்மருந் தாகும் உன்உரு அதனால்
எம்மனோர் வாழ நல்குதி சுகமே!
எம்மதீர் இருகால் இருகாற் பசுக்கள்
இன்பம் எதனால் எய்திடும் அதுவும்
எமதூர் இதனிடை எல்லா உயிர்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வணக்கம் வெரிநிடை வேரிடை யோற்கு
வணங்குதும் மனிதனைச் சரித்திடும் அவனை
வணங்குதும் நமனொடு சுவர்க்க வாசியை
வணங்குதும் பயிரொடு களத்தின் வாசியை
வணங்குதும் நூலதின் முடிவின் வாசியை
வணங்குதும் புதரொடு வனத்தின் வாசியை
வணங்குதும் ஒலியெதிர் ஒலியாயி னானை 10
வணங்குதும் சேனையை விரையும் தேரை
வணங்குதும் சூரனைத் துட்டநிக் கிரகனைக்
கவசனைப் பாகர்ப் புரப்போனை வணங்குதும்
தலையிற் பாகை தரித்தோனை வணங்குதும்
வணங்குதும் கவசி வடிவுடை யோனை
வணங்குதும் மாப்புகழ் உடைப்படை யோனை 16

ஆறாவது அனுவாகம் முற்றும்

ஓம்

சிவ சிவ

7-வது அனுவாகம்

வணங்குதும் குறுந்தடி துந்துபி வடிவனை
வணங்குதும் பின்னிடாப் பெருவலி உருவனைப்
பகைவர் சைனிய வலிநிலை இதுவென்று
இனிதாயும் இவனை வணங்குது மன்றி
வணங்குதும் தூதுடன் ஒற்றாயி னானை
வணங்குதும் தூணியன் வாளினன் னானை
வணங்குதும் கூரம் புடையன் தன்னை
வணங்குதும் ஆயுதம் பலஉடை யோனை
வணங்குதும் நற்றனு நற்படை யோனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொடியரை அறுத்தங் கடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்
துயர்கொடி யர்க்குறுத் தடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்
கொடியரை நேடி அடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்
கொடியரை ஒறுத்தங் கடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்
கொடியருக் கின்றி அடியர்தம் இதயம்
வைகுருத் திரராம் உமக்கு வணக்கம்

ஒன்பதாவது அனுவாகம் முற்றும்

ஓம்.

சிவ சிவ

10-வது அனுவாகம்

இழித்திடப் படுவோய் அன்னத்திற் கிறைவ!
நீலலோ கிதபல் இலம்படு நிலைய
சிறுவர் சிறுமியர் எருமை பசுமுதல்
இவைதமை அச்சுறுத் தற்க! இவைதாம்
இறப்பொடு நோயிலா திருக்க அருளுக!
உருத்திர சாந்தி சாந்தி தாமுமாய்
நோய்க்கு மருந்தாய்அப் பிறப்பறுத் திடும் ஓர்
நன்மருந் தாகும் உன்உரு அதனால்
எம்மனோர் வாழ நல்குதி சுகமே!
எம்மதீர் இருகால் இருகாற் பசுக்கள்
இன்பம் எதனால் எய்திடும் அதுவும்
எமதூர் இதனிடை எல்லா உயிர்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இன்மைநோய்விருத்தி இவைபெரி துதவும்
கொடுத்திடும்உபாசனாக் குறியை எமக்குக்
கபர்த்தி தபசி நசிக்கும் பகையைச்
செயிப்போ யென்றும் செய்திடும் மாதோ!
உருத்திர யாமிங் குறஅருள் இன்பம்
பந்தம் விடுபடப் பண்ணுதி எமது
பந்தம் விடுபட உனது பதமலர்
தொழுது புரிதுநாம் வழுவினற் பூசை
எம்பிதிர் அனைய மனுஉன தருளால்
சிறுசுகம் பெருஞ்சுகம் தேடினன் அவைதமை
எம்மனோர் உறுமாறு நல்குருத் திரனே!
உருத்திர ஒறுக்கலை எம்முதி யோரை
உருத்திர ஒறுக்கலை எமதுபா லகரை
உருத்திர ஒறுக்கலை உயர்திருக் குமாரரை
உருத்திர ஒறுக்கலை உய்க்கருக் குழவியை
உருத்திர ஒறுக்கலை எமதுதா தையினை
உருத்திர ஒறுக்கலை எமதுமா தாவை
உருத்திர ஒறுக்கலை எனதுடல் தன்னை
உருத்திர முனியா தொழியெமை என்றும்
உருத்திர முனியா தொழிசிறு மியரை
உருத்திர முனியா தொழிசிறு வோரை
எமதாய் உடம்பை இனிமுனி யற்க!
எமது பசுவினை இனிமுனி யற்க!
எமது அசுவத்தை இனிமுனி யற்க!
எமது சேவகரை இனிமுனி யற்க!
அன்னமுன் ஆம்நல் உபகர ணங்கொண்டு
உன்னைத் தொழுதிங்கு உஞற்றுதும் பூசை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உருத்திர பசுவினைக் கொல்லா தொழிக!
உருத்திர குழவியைக் கொல்லா தொழிக!
கொடியர்கள் தம்மைக் கொல்லுநின் னுடைய
நல்ல உருவுநம் அணிமையி ணாகுக!
எங்குறை மறைத்தங் கிசைக்க அமரருக்கு
இருவே றின்பும் ஈயும் உருத்திர
இருவே றின்பும் எமக்கீந் தருளுக!
எங்கும் எவரும் அறியப் படுவோன்
எங்கும் எவர்தம் இதயத் துறுவோன்
என்றும் அழியலன் இம்சைசெய் திடுவோன்
சிங்கம் எனச்செயும் பயமிக உடையோன்
உக்கிரன் எவன்அவன் இவன்உருத் திரனைத்
துதித்தும் அத்துதிக்கப் படும்அவ் வுருத்திரன்
அழியும் உடல்உடை எமக்கின் பருளுக!
உருத்திர உன்கணம் எமது பகைவரை
நலிதர நாசம் செய்திட மாதோ!
உருத்திரன் படையெமை விடுக! பா வத்தால்
உருப்பன் உருப்பின் இலங்கிச் சொலிப்பன்
எம்மை ஒறுத்திட எண்ணுமந் நினைவை
ஒழிக! அடியருக் குறுப்போ யெவையும்
பெரிதும் அருச்சனை புரிதரும் எமக்குத்
துயர்செய் வினையொடு படைவிடும் ஆற்றை
ஒழி! எம் சிறுவர் சிறுமியர் என்றும்
உருத்திர சுகம்உற உறுத்திடு மாதோ!
உன்னுவ பெரிதருள் உருத்திர சிவதம
அருளுக! சிவத்துவம் அருளுக! சுகத்துவம்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெருமரத் தடியிடைப் பெய்க! படையெலாம்
வருக! புலியதன் உடையொடு பினாகம்
கரங்கொடு வருக! வருக! உருத்திர!
விலக்குதி துன்பெலாம் விலோகித! பகவ!
ாய்துக! உனக்கெம் வணக்கம் உன்னுடைய
படையெலா மெமது பகைவர்கள் நாசம்
அடைய விடுக! விடுக! உருத்திர!
பகவ!ஈ சான! உனது கரப்படை
அநேக அளவைய அநேக திறத்தன
அவையெமை எதிரா தருளுக! மாதோ!

பத்தாவது அனுவாகம் முற்றும்

ஓம்

சிவ சிவ

11-வது அனுவாகம்

பல்லா யிரத்தர் பகுப்பா யிரத்தர்
இந்நிலத் திருக்கும் உருத்திர கணத்தர்
அவர்வில் ஒடிந்திங் காயிர யோசனைக்
கப்புறத் துறுமா றவிழ்க்குதும் கயிறே
இப்பெருங் கடலின் இருவிசும் பிடையின்
வைப்புறம் உருத்திர கணமுத லோரார்
அவர்வில் ஒடித்தங் காயிர யோசனைக்
சுப்புறத் துறுமா றவிழ்க்குதும் கயிறே
நீலகண் டத்தர் வெண்கழுத் துடையர்
சாலும் துறக்கத் தலைவர் பல்உருத்திரர்ராம்
அவர்வில் ஒடித்தங் காயிர யோசனைக்
கப்புறத் துறமா றவிழ்க்குதும் கயிறே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீலகண் டத்தர் இளம்புல் நிறத்தர்
விலோகித! உருத்திர! கணங்கள் எணம்பல
பூதாதி பதியாம் முண்டிதத் தலைவர்
சடையுடை உருத்திர கணங்கள் எனும்பல
அனலின் இருந்தங் காக்குவோர் துன்பம்
புனலின் இருந்தங் காக்குவோர் துன்பம்
நற்சம யங்கள்தமை நிறுத் திடுவோர்
அற்சம யங்கள் தமையறுத் திடுவோர்
அன்னம் மலையா அமைந்திடு கிற்போர்
கொடியரை ஒறுக்கும் வடிவுபெற் றிடுவோர்
இன்ன உருத்திர கணங்க ளெண்ணம்பல
சிறுகாப் படையர் பெருவாள் உடையர்
திருத்தம் எங்கும் திரிதரு கிற்போர்
இங்ஙனம் உ்ரைத்த கணத்தரும் அன்றி
உரைக்கும் கணக்கில் உருத்திர கணத்தர்
அவர்வில் ஒடித்தங்க காயிர யோசனைக்
கப்புறத் தவிழும் கயிறவாச் செய்தோம்
புவியில் வாழும் உருத்திர கணத்தர்
அவர்தமக் குணவங் கத்திரம் ஆகும்
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் கிழக்கே
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் தெற்கே
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் மேற்கே
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் வடக்கே
அவர்தமக் கஞ்சலி ஆக்குதும் மேலே
உருத்திர கணங்கட் குஞற்றுதும் துதிபல
உருத்திர கணங்கள் உஞற்றுக சுகமிக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வணங்கிடும் எம்மனோர் எவரை வெறுக்குதும்
வணங்கிடும் எம்மை எவர்வெறுத் திடுவர்?
இவர்தமை நும்பெரும் வாயிடை இடுதும்
இவர்தமை உண்டெமை அருளுக! இனிதே
பாணம் உணவுகொள் பல்லுருத் திரகணம்
வாயுவம் பாக வசிக்கும் விசும்பிடை
அவைதமை நான்கு திசையினும் மேலும்
வணங்குதும் அவையெமக் கின்பு வழங்குக!
எமக்கெவர் வெறுப்பெவர்எம்மை வெறுப்பர்
உவரை இடுதும்நும் வாயிடை உண்டிங்
கவரை அழித்தெம்மைஅருளுக! இனிதே!
அன்றியும் மழையது பாணம அதாகத்
திவியிடை வைகுவ் வுருத்திர கணம்பல
அவைதமை நான்கு திசையினும் மேலும்!
வணங்குதும் அவையெமக் கின்ப் வழங்குக!
எமக்கெவர் வெறுப்பெவர்எம்மை வெறுப்பர்
உவரை இடுதும்நும் வாயிடை உண்டங்கு
அவரை அழிந்திங் கருளுக! இனிதே

ஓம்

சாந்தி

நறுவிரை உடையன் அவ்விருத்திநன் குடையன்
திரியம் பகனைச் செய்தும் நாம் பூசை
வெள்ளெரிக் கனிவலி விடுபடும் அதுபோல்
பந்தம் ஒழிஒழி யற்க! வீ டதுவே
அனலின் இருப்போன் அவன்உருத் திரனே!
புனலின் இருப்போன் அவன்உருத் திரனே!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவுடதி இருப்போன் அவன்உருத் திரனே!
அனைத்துல கத்துளன் அவன்உருத் திரனே!
அவ்வுருத் திரன்அவற் காகவிவ் வணக்கம்
நற்சடை முடியன் அவன்உருத் திரனே!
நற்றனு வுடையன் அவன்உருத் திரனே!
அனைத்தவு டதக்கிடன் அவன்உருத் திரனே!
அவ்வுருத் திரன்அவற் காகஇத் துதியே!
மிகுநலம் அருளும் வீரியம் உடையன்
சிவன்உருத் திரன் அவற் கருச்சனை செய்குதும்,
தொழுதல் புரிகுதும் புரிகுதும் துதியே!
என்கரம் சிவனுருத் தொடப்பெறும் இதனான்
என்கரம் அறத்தஅவ் அறத்தின் தரத்த
என்கரம் பிணிஅவை அனைத்தின் மருந்தே!
என்கரம் மருந்தின் தரத்ததும் ஆமே!
ஆயுதம் ஆயுதம் ஆயிரம் உனக்குள
அவற்றை விலக்குதும் அருச்சனை புரிந்தே
பகவ உருத்திர வியாபக! வணக்கம்
பந்தம் விடுபடப் பரிந்தருள் எமக்கிங்கு
ஆதி தைவிகம் ஆதி பௌதிகம்
ஆதி ஆன்மிகம் ஆயமுத் துயருக்கு
ஆகுக! சாந்தி! சாந்தி! சாந்தியே!
ஓமம் ஆகுக! உருத்திர உனக்கிவ்
வணக்கம் ஆகுக! உருத்திர உனக்கெம்
உருவினை ஒழிக்க! உருத்திர எனக்குச்
திரிவினை ஒழிக! திரிசாந்தியி னோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

ஸ்ரீ ருத்திராத்தியாயம் முற்றும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீமகாருத்ர பாத வணக்கம்

இதை பாராயணம் செய்தால் தீவினை அனைத்தும் அழிதல் ஒருதலை; உடல், உள்ளத்தூய்மையுடன் திருநீறு அணிந்து தினமும் பதினோறு முறை இதனைப் பாராயணம் செய்பவர் வசிக்கும் இடத்தில் ஏற்படும் தீமைகள் அனைத்தும் அழிவதோடு அங்குள்ளோருக்கு நோயின்மை, செல்வப்பெருக்கு, பொருள் அழியாமை முதலிய பல நன்மைகள் பெருகிப் பரவி என்றும் நின்று நிலை பெறும் என வேதம் கூறுகிறது.

இம் மகா ருத்ர பாத வணக்கத்தில் 11 அனுவாகங்கள் (உட்பிரிவிகள்) உள்ளன.

முதல் அனுவாகம் : இதன் கண் வேத வடிவிலான இறைவனது ஆணையை மீறி நடந்தால் கோபடைந்த கடவுள் நேரில் அருள்புரிய வேண்டும் என வேண்டப்படுகிறார்.

2 முதல் 8 அனுவாகம் : கடவுளின் கருணை ஏற்பட அவரை மன்றாடுவதே சிறந்த சாதனமாகையால் அவருடைய தன்மை, எல்லா உயிர்களிடமும் இலங்குதல், எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்றல் முதலிய குணங்களை எடுத்துக்காட்டி வணங்கப்படுகிறார்.

9ஆவது அனுவாகம் : உலக முதற்பொருள் அனைத்திலும் ஊடுருவி நின்று இயக்கும் தன்மைகண்டு வணங்கலாம் என்கிறது.

10ஆவது அனுவாகம் : வணக்கத்தால் வெளியிடப்பட்ட கடவுளின் கருணை கிடைக்க வேண்டும் எனவும் கோபம் விலக வேண்டும் எனவும் வேண்டப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

11ஆவது அனுவாகம் : நாயகன் கருணை கிடைத்தது போலவே, நினைத்தது கைகூடும் பொருட்டு அவரது பரிவாரங்களின் முக்கிய கணங்கள் வணங்கப்படுகிறார்கள்.

இதனை பாராயணம் செய்து மெய்யன்பர்கள் அழியா முக்தி ஆனந்தம் பெறுபவார்களாக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6. அக்கினி தேவர் துதிசெய்த அழகியசுூத்தர் தோத்திர அஷ்டகம்

பக்தானுரக்தாய பராத்பராய
பாலாக்ஷிநெ பத்மவார்ச்சிதாய
பரமசிவாய பதயெசிவாய
நமோநம : சுந்தர தாண்டவாய 1

ரதி மநஸ்தாம நிவாரணாய
ரமாபதி பிரிதீகராய துப்பியம்
ராஜாதிராஜப் பிரிய காரணாய
நமோநம : சுந்தர தாண்டவாய 2

தத்துவார்த்த ரூபாய ஸதாசிவாய
சத்சாக்ஷிநெ சர்வ சுரோத்தமாய
சாம்பாய சர்வாமா வல்லபாய
நமோநம : சுந்தர தாண்டவாய 3

பிரியா சமேதாய ஸநாதநாய
அபீஷ்டதாத்ரே நடநாயகாய
நராமராநாம அபிசாஸ்த்ரதிநாம்
நமோநம : சுந்தர தாண்டவாய 4

யாகா த்மநெ யககிருதாம் பிரியாய
யோகாத்மநெ யோக பிரர்ச்சிதாய
நாகாத்நெ நாரத பூஜிதாய
நமோநம : சுந்தர தாண்டவாய 5

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யஸ்யாம் கிரிபத்ய பணிபத்யதேவ
தத்தத்சுவபதம் பிரம்ம முகார்ச்சசித்தா
பிரபேதி ரேபாக்ய கராயதஸ்மை
நமோநம : சுந்தர தாண்டவாய 6

நமச்சிவாயயேதி சகிருத்ஜலஸ் துப்பியம்
அனந்த தாத்ரே அரிவல்லபாய
திரியம் பகாய திரிபுராந்தகாய
நமோநம : சுந்தர தாண்டவாய 7

மாணிக்க மஞ்சிர மயூரஜால
ஸம்சர்ப்பி பாதாருண பங்கசாய
பாலார்க்ககோடி துவிசந்திபாய
நமோநம : சுந்தர தாண்டவாய 8

மேற்படி அஷ்டத்தின் தமிழாக்கம்

வீழுமன்பர்க்கருள் புரிவோய் மெய்ப்பரத்துட் பரமாவோய்
நீளுநெற்றிக் கண்ணுடையோய் நேரிலயன் வழிபடுவோய்
வாழிபரைப் பதியாவோய் மங்களவின் புருவுடையோ
யாளுமழுகிய கூத்தோ யடி போற்றி போற்றியவே 1

மதன்றேவி மன வருத்த மாற்றியவட் கருள்புரிவோய்
புதுமதுவச் செங் கமலப் பூவைபதி காதலிப்போய்
திதிபுரிநல் லரச ரெல்லாஞ் செயுமிச்சைக் கிடைமாவோ
யதுலவழகிய கூத்தோ யடிபோற்றி போற்றியவே 2

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொருள்வடிவோய் தத்துவத்தின் பொலிசதாசிவ வடிவோ
யருணித்தச் சான்றுருவோ யமரர் தம்முட் டலையாயோய்
பரையையொரு பாலின் வைத்தோய் பண்ணவருளாற்றலுளோ
யரியவழகிய கூத்தோ யடிபோற்றி போற்றியவே 3

சந்தமலை மங்கை பங்கோய் நினதுய்ய சரணமெனுங்
சுந்தமலி செங் கமலங்கண்டு சுரர் நரர்க்குத்
தந்தமிச்சை தந்தருள்வோய் தாண்டவத்திற் றலையாயோ
யந்தி லழகிய கூத்தோ யடிபோற்றி போற்றியவே 4

வேள்வியினல் வடிவுடையோய் வேட்போர்மேல்
விழைவுடையோய்
தாள்யோக வடிவுடையோய்தவர் போற்றி செயப்படுவோய்
வீழ்நாதவடி யோய் நாரதனேத்த வீற்றிருப்போ
யாளெம்மழ கியகூத்தோ யடி போற்றி போற்றியவே 5

ஏவன்றன் பத மேத்தி யமரர்சித்த ரயனேனோர்
தாவிறத்தம் பதம் பெற்றார் அத்தன்மைத் தாயபல
தேய்வதிலா வாழ்வு நினைச் சேர்ந்தோருக் கீந்தருள்வோ
யாவி னழகிய கூத்தோ யடிபோற்றி போற்றியவே 6

நமசிவய நன் மனுவை நயந்தொருகாற் சொல்வோர்க்குந்
தமசதிலா வின்பருள் வோய் சங்கேந்துஞ் சக்தியுளோ
யமைதருமுக் கண்ணு டையோ யன்றினவர் புரமழித்தோ
யமலவழ கிய கூத்தோ யடி போற்றி போற்றியவே 7

மணித முண்மா ணிக்கமொத்து மகிழ்செய்கதிர்த் தொகுதிபல
வணவுபதச் செங்கமல மார்ந் துளோய் கோடியெண்ண
மிணையுமிள ஞாயிறு நேர் காந்திவடி வேய்தருமோ
மணையுமழ கிய கூத்தோயடி போற்றி போற்றியவே 8

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

செல்வநெடு மாடம் சென்றுசேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே

– ஒன்றாந்திருமுறை தேவாரம்

பட்டம் பால்நிற மதியம்
படர்சடைச் சுடர்விடு பாணி
நட்ட நள்ளிருள் ஆடு
நாதன் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையொடு ஆடும்
பூம்புக லூர்த் தொண்டர் போற்றி
வட்டம் சூழ்ந்தடி பரவும்
வர்த்த மானீச்சரத் தாரே.

– இரண்டாந்திருமுறை

ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்கஎமதொல்வினையே.

– மூன்றாந்திருமுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தொடுத்த மலரொடும் தூபமும்
சாந்தும் கொண்டு எப்பொழுதும்
அடுத்து வணங்கும் அயனொடு
மாலுக்கும் காண்பரியான்
பொடிக் கொண்டு அணிந்து பொன்னாகிய
தில்லைச் சிற்றம்பலவன்
உடுத்த துகில் கொண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

– நான்காம் திருமுறை (திருநேரிசை)

அல்லல் என் செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே.

– ஐந்தாம் திருமுறை (திருகுறுந்தொகை)

முற்றாத பால்மதியஞ் சூடி னானை
மூவுலகுந் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்ற புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

– ஆறாம் திருமுறை (திருத்தாண்டகம்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பேராது காமத்திற் சென்றாற் போல்
அன்றியே பிரியா துள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடி வீழுந் திருவினாரை
ஓராது தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே.

- ஏழாம் திருமுறை

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காணஎன்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே.

- எட்டாம் திருமுறை (திருவாசகம்)

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்து மென்
சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த வொண்டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே.

- திருக்கோவையார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக் கண் ணுடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே

– ஒன்பதாம் திருமுறை (திருவிசைப்பா)

மன்னுக தில்லை! வளர்க நம்
பக்தர்கள்! வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறி தந்த
பித்தருக்குப் பல்லாண்டு கூறுதுமே.

(திருப்பல்லாண்டு)

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறிவாரே

– பத்தாம் திருமுறை (திருமந்திரம்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நானே பிறந்த பயன்படைத்.
தேன் அயன் நாரணன் எம்
கோனே எனத் தில்லை அம்பலத்
தேநின்று கூத்து கந்த
தேனே திருவுள்ளமாகி யென
தீமையெல் லாம் மறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத்
தேவந்து சந்திக்கவே

– பதினொன்றாம் திருமுறை

ஆதியாய் நடுவும்ஆகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வும்ஆகி தோன்றிய பொருளுமாகிப்
பேதியாய் ஏகம்ஆகி பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

– பனிரெண்டாம் திருமுறை (பெரிய புராணம்)

திருச்சிற்றம்பலம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection